REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ThinakaranLk / ThinakaranLK

2024 ஜூன் 11 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 138 | Tuesday 11, June, 2024 | 16 பக்கங்கள் | 50/-







## இந்திய அமைச்சர் ஜெய்சங்கருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சு

### இந்திய முதலீட்டுத் திட்டங்களை மீள ஆரம்பிக்க இணக்கம்



இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (10) இந்திய சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரைச் சந்தித்து பேச்சு நடத்தினார். இச்சந்திப்பில், இடை நடுவில் தடைப்பட்டுள்ள

06

## சட்டவிரோத கட்டடங்களை அகற்றி வெள்ளத்தை கட்டுப்படுத்த திட்டங்கள்

### கொழும்பு நகரை அண்மித்த பகுதிகளில் அமுலாக்க சுற்றுநிருபம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தும் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. இத்திட்டத்தின் பிரதான அம்சமாக கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள சட்டவிரோத கட்டடங்கள் அகற்றப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பான சுற்று நிருபம் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்பட்டு, அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கு கையளிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில், நகர

06

### ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா

## இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கு பங்களாதேஷ் ஒத்துழைக்கும்



இலங்கையில் முன்னெடுக்கப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கு பங்களாதேஷ் ஆதரவளிக்கும் என, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா உறுதியளித்துள்ளார். புதுடில்லியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் ஷேக் ஹசீனா இதனைத் தெரிவித்தார். இந்த உறுதிமொழியையடுத்து,

06

# இந்திய - இலங்கை உறவுகளை வலுவாக தொடர்வதற்கு இரு தலைவர்களும் உறுதி

### மூன்றாவது முறையாகவும் இந்திய பிரதமராக பதவியேற்ற நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து

இந்திய - இலங்கை உறவுகளை வலுவாகத் தொடர இருநாட்டுத் தலைவர்களும் மீண்டும் உறுதிபூண்டுள்ளனர். அயல்நாடுகளுக்கு முன்னுரிமை வழங்கும் இந்திய பிரதமர் நரேந்திமோடியின் நிலைப்பாடு இதற்கு பெரிதும் உதவும் என்றும் நம்பப்படுகிறது. மோடியின் பதவி ஏற்பு நிகழ்வில் பங்கேற்கச் சென்றிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடில்லியில் மோடியை சந்தித்து கலந்துரையாடினார். நரேந்திர மோடியின் பதவியேற்பு விழா நேற்று முன்தினம் புதுடில்லி ராஷ்டிரபதி பவனில் பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் நடைபெற்றது. அவரது விசேட அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால், மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முயிஸ், சீஷெல்ஸ் உப ஜனாதிபதி, மொரீஷியஸ் பிரதமர் மற்றும் பூட்டான் பிரதமர் உட்பட பிராந்திய அரச தலைவர்கள் பலர் இந்த பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர். பிராந்திய அரச தலைவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அங்கு உயர் அங்கீகாரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர், பிராந்திய தலைவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு

06



# ரயில்வே வேலை நிறுத்தத்துக்கு அமைச்சரின் தலையீட்டில் தீர்வு

### ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகள் உரிய காலத்தில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ரயில்வே தொழிற்சங்கங்கள் நேற்று மதியம் முதல் போராட்டத்தை கைவிடுவதாக தெரிவித்துள்ளன. போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் நடத்திய விசேட பேச்சுவார்த்தையின் பின்னர், இவர்கள் வேலை நிறுத்தத்தை கைவிடத் தீர்மானித்ததாக ரயில்வே தொழிற்சங்கத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

இப்பேச்சுவார்த்தை நேற்று போக்குவரத்து அமைச்சில் நடைபெற்றது. ரயில்வே ஊழியர்களின் இரண்டாம் வகுப்பு பதவி உயர்வுக்கான தாமதம், ஆட்சேர்ப்புக்கான தாமதம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டன. பேச்சு வார்த்தையில் காணப்பட்ட இணக்கப்பாட்டிற்கு இணங்க, இந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. ரயில்வே தொழிற்சங்கங்கள் சில கடந்த நான்கு நாட்களாக தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. இதனால், பல ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

எனினும், ரயில்வே திணைக்கள அதிகாரிகளின் பகீரத முயற்சியினால் அலுவலக ரயில்கள் உள்ளிட்ட பல ரயில் சேவைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய நிலையில் நேற்றுக்காலை மேலும் சில அலுவலக ரயில் சேவைகளை இரத்துச் செய்வதாக ரயில்வே திணைக்களம் அறிவித்திருந்தது.

இதையடுத்து உடனடியாக செயலில் இறங்கிய அமைச்சர் பந்துல குணவர்தன, தொழிற்சங்க பிரதிநிதிகளை அமைச்சுக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த்தையில் காணப்பட்ட இணக்கப்பாட்டிற்கு இணங்கவே, வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது.




03 தரமற்ற சோப்புக்களை பயன்படுத்த வேண்டாம்!


### அமைச்சர் டக்ளஸின் அழைப்பினையேற்று

## யாழ்ப்பாணம், கிளிநொச்சிக்கு பிரதமர் தினேஷ் விஜயம்



பிரதமர் தினேஷ்குணவர்தன அடுத்தவாரம் வடபகுதிக்கு விஜயம் செய்யவுள்ளார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பை ஏற்று, அங்கு செல்லும் பிரதமர், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வடபகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்களையும் பிரதமர் பார்வையிடவுள்ளார். இதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை பெறும் நோக்கிலே பிரதமருக்கு இந்த அழைப்பு

06




03 ஹிருணிகாவுக்கு எதிரான வழக்கு; விசாரணை அக்டோபர் 21 இல்


### தமிழ் பொது வேட்பாளர்

## தமிழர்களின் இருப்பை இல்லாமலாக்கும் சூத்து



தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக முழு மூச்சோடு இறங்கிச் செயற்பட வேண்டுமென, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்ற மக்கள் மன்ற நிகழ்வில் கலந்து கொண்டு, உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு உரையாற்றிய அவர்:

சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வே வேண்டும் என்பதை இனியும் நிறுவத்

06

## ஆரம்ப சுகாதார சேவையை பலப்படுத்த ஜெய்க்கா உதவி: ரூ.70 பில்லியனில் திட்டம்

### தொற்றா நோயினால் 89 வீத மரணங்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் இடம்பெறும் மரணங்களில் நூற்றுக்கு 89 வீதமானவை, தொற்றா நோய்களால் ஏற்படுவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ நிபுணர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

தொற்றா நோய் காரணமாக ஏற்படும் மரணங்கள் தொடர்பில் கவனம் செலுத்துகையில், நாட்டில் 10 பேரில் நால்வர் அல்லது ஐந்து பேர் ஐம்பது அல்லது அறுபது வயதுக்கு குறைவானவர்களே இவ்வாறு

06

## முன்பள்ளி ஆசிரியர்களின் மாதாந்த கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும்



முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளன. இவர்களுக்கு மாதாந்தம் வழங்கும் 2500 ரூபாவை 5000 ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் முன்பள்ளி ஆசிரியர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலே, விவசாய மற்றும் தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இதனை தெரிவித்தார். இதன்படி, நாட்டில் உள்ள சுமார் 34,000 முன்பள்ளி

06

## வர்த்தகரிடம் 15 கோடி ரூபா மோசடி செய்த பெண் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வர்த்தகர் ஒருவரிடமிருந்து 15 கோடி ரூபா பணத்தை பெற்று, அதனை மீள வழங்காமல் மோசடி செய்த குற்றச்சாட்டில், பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மாகொல பிரதேசத்தை சேர்ந்த 54 வயதுடைய பெண்ணொருவரே கைது

06

## லயன்ஸ்கழக சிறந்த குடிமகன் விருது




NSBM பசுமைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் இ.ஏ.வீரசிங்க, சமூகத்திற்கு ஆற்றிய சிறந்த பங்களிப்புக்காக, லயன்ஸ் கழகத்தின் சிறந்த குடிமகன் விருதைப் பெற்றுள்ளார். கழகத்தின் 19 ஆவது வருடாந்த மாநாட்டில் இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்வு கலதாரி ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றிருந்தது. சமூகத்திற்கு இவர் ஆற்றிய சிறப்பான தாக்கம் மற்றும் நிலையான பங்களிப்புக்காக இந்த கௌரவ விருது வழங்கப்பட்டது. (படம்: சுலோச்சன கமகே)

## தோட்டத் தொழிலாளர்களின் எஞ்சிய நிலுவையை வழங்குவதற்கு நடவடிக்கை

தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்குவதற்கு தோட்ட நிர்வாகங்கள் முன்வந்துள்ளன. பெரும்பாலான தோட்டங்களில் நேற்று தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்ட போதிலும், அதிகரிக்கப்பட்ட தொகைக்கேற்ப சம்பளம் வழங்கப்படவில்லை. இருப்பினும், சில தோட்டக் கம்பனி நிறுவனங்கள் கடந்த 21 முதல் அதிகரிக்கப்பட்ட 1700 ரூபா நாளாந்த சம்பளத்தை வழங்கும் வகையில், குறிப்பிட்ட இக்காலப்பகுதிக்கான நிலுவைத் தொகையான 700 ரூபாவை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தன.

இது தொடர்பாக ஹட்டன் பிரதேசத்திலுள்ள தோட்ட நிர்வாக உயரதிகாரியொருவர் தெரிவிக்கையில்: எஞ்சிய நிலுவைத் தொகையை வழங்குவதற்கான விபரங்களை தயார் செய்யுமாறு குறிப்பிட்ட தோட்ட கம்பனி உத்தரவிட்டுள்ளது.

இதற்கமைவாக இந்நிலுவைத் தொகை விரைவாக

06

# இந்தியப் பிரதமர் பதவியேற்பு வைபவத்தில் பங்கேற்ற ஜனாதிபதி

















# பாடசாலைகளில் தன்னம்பிக்கையோடு கற்கும்சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும்

பிள்ளைகள், பாடசாலையில் தன்னம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும் கற்கும் சூழலை உருவாக்க வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கொட்டாவ வடக்கு தர்மபால கல்லூரியின் கேட்போர் கூடம் மற்றும் உள்ளக விளையாட்டு மண்டபத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர்

தர்மபால என்ற பெயர் ஒரு தேசத்தின் உயிர். தர்மபால மகா வித்தியாலயம் ஸ்தாபிக்கப்பட்டு நூறு வருடங்களுக்கு மேலாகிறது. இவரின் மகத்தான தேசிய சிந்தனையை இப்பாடசாலையில் சேரும் பிள்ளைகள் முன்னெடுத்துச் செல்கின்றனர். இங்கிருந்து வெளியேறும் பிள்ளைகள், பாடசாலையின் கௌரவத்தை பாதுகாத்து தேசத்திற்கு கீர்த்தியை கொண்டுவரும் நற் பிரஜைகளாக மாறுகிறார்கள். இந்த வெற்றியை கொண்டு வர எங்கள் பெற்றோர்கள் நீண்ட நாட்களாக செய்த கோரிக்கைகளை நான் நன்கு அறிவேன். பிரதமர், பொது நிர்வாக அமைச்சர் என்ற பதவிகளை விட மஹரகம பாராளுமன்ற உறுப்பினராக ஆற்றிய சேவையையே நான் விரும்புகிறேன். உங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இந்தப் பாடசாலைகள் அனைத்திற்கும் சேவையாற்ற முடிந்தது.



கட்டிடங்கள் மட்டுமின்றி பல்வேறு துறைகளிலும் பிரவேசிக்கக்கூடிய பாடப்பிரிவுகளுடன் பாடசாலைகளை வலுப்படுத்துவது எதிர்கால சந்ததியினருக்கு நாம் உருவாக்கும் அடித்தளமாகும். இன்று முதன்முறையாக இப்பாடசாலையில் உயர்தர மாணவர்கள் மூவர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுவதற்கு தகுதி பெற்றுள்ளனர். இது பெருமைக்குரிய விடயம். இப்பாடசாலை

06

# ஹிருணிகாவுக்கு எதிரான வழக்கு; விசாரணை அக்டோபர் 21 இல்.

(லோரன்ஸ் செல்வநாயகம்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்ர உள்ளிட்ட 15 சந்தேக நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை, எதிர்வரும் அக்டோபர் 21இல், விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கடந்த வருடத்தில் சர்வதேச மகளிர் தினத்தன்று கொழும்பு கறுவாத்தோட்ட பொலிஸ் வீதிகளை மறித்து, மக்கள் பாதிப்படையும் வகையில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பொலிஸார் இந்த மனுவை மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு,நேற்றைய தினம் மேற்படி முறைப்பாட்டு மனு மீதான விசாரணை நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது கறுவாத்தோட்ட பொலிஸார் நீதிமன்றத்திற்கு விடயங்களை முன்வைத்தனர். மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய



விசாரணைகள் நிறைவு பெற்றுள்ளதாகவும் விசாரணைக் கோவைகள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைத்தவுடன் மேற்படி வழக்கு தொடர்பில், பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

அதற்கிணங்க மேற்படி மனு மீதான விசாரணை எதிர்வரும் அக்டோபர் மாதம் 21 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# ரயில்வே அதிகாரிகளுடன் பேச்சு



ரயில்வே தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துலகுணவர்தன வேலைநிறுத்தத்தை கைவிட்டு பணிக்குத் திரும்புமாறு ஆலோசனை வழங்கினார். மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் வேலை நிறுத்தங்கள் இன்றைய சூழ்நிலையில் நியாயமானதாக அமையாது என்பதைச் சுட்டிக்காட்டியதுடன் ரயில்வே துறையினரின் நியாயமான கோரிக்கைகளை ஏற்பதாகவும் உறுதியளித்தார். இதையடுத்து போராட்டம் நேற்று கைவிடப்பட்டது,

# தரமற்ற சோப்புக்களை பயன்படுத்த வேண்டாம்!

## அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் சங்கம்

தரமில்லாத சோப்புக்களை பயன்படுத்துவதால் சிசுக்களின் தோலில் பல்வேறு உபாதைகள் ஏற்படுவதாக, அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி அச்சங்கம் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய பொருளாதார சூழ்நிலை காரணமாக சில பெற்றோர்கள், குழந்தைகளுக்கு தரமற்ற சோப்பை பயன்படுத்துகின்றனர். இதன் விளைவை, எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரிடும். அண்மைக் காலமாக குழந்தைகளுக்கு சில ஒவ்வாமைகள் ஏற்பட்டுள்ளன. இதை ஆராய்ந்தபோது ஒரு விடயம் புரிந்தது, தரமற்ற குழந்தை சோப்பை பயன்படுத்துவதால் இந்நிலை ஏற்படுகிறது. குறிப்பாக, தாய்மார்கள் குழந்தைகளுக்கான சோப்பைப் பயன்படுத்தும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழுடன் கூடிய குழந்தை சோப்பைப் பயன்படுத்துவதே சிறந்ததாகும். குழந்தையின் தோல் மிகவும் மென்மையானது. எனவே,தரமற்ற சோப்புக்களை பயன்படுத்துவதை நிறுத்துவதே சிறந்தது. குறிப்பாக பொருளாதார சூழ்நிலையில், இதில் கவனமாக இருக்குமாறும் அச்சங்கம் தெரிவிரித்துள்ளது.

# வெள்ள நிலைமைகளை கட்டுப்படுத்த சிறப்பு ஏற்பாடு

கொழும்பில் வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்காக தற்போது பாரிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இதுதொடர்பாக மேலும் தெரிவித்த அவர்: அம்பத்தளை, நாகலகம் வீதிய மற்றும் செபஸ்தியன் ஆகிய இடங்களில் உள்ள நீர் இறைக்கும் நிலையங்கள் மற்றும் அது தொடர்பான கால்வாய் அமைப்புகளின் புனரமைப்புக்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிரற்ற காலநிலையால் , கொழும்பு பிரதேசம் வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பாதிப்பு மேலும் ஏற்படாதவகையில் பல வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த 2010 ஆம் ஆண்டுக்கும் 2020 ஆம் ஆண்டுக்கும் இடையில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் மிகவும் சிறப்பாக உள்ளது. இந்த திட்டங்கள் கொழும்பு நகரின் வெள்ள நிலைமையை பெருமளவில் குறைத்துள்ளது.இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

# வரி நிலுவைகளை அறவிடுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

## சபையில் அறிக்கையாக சமர்ப்பிக்கப்படும்



ஆயிரம் பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வரி நிலுவையை அறவிடுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலான அறிக்கையை, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவான்வெல்லையில் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலே இது தொடர்பாக அவர் தெரிவித்தார்.இதுபற்றி மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் :

சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து வரியை பெற்றுக் கொள்வதில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தவறியுள்ளனர்.இது தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட சில அதிகாரிகள் மற்றும் தனி நபர்களால் இவ்வாறான தவறுகள் இடம்பெறுவது உண்மையே. எனினும்,பெரும்பாலான உத்தியோகத்தர்கள் தமது பொறுப்பை திறன்பட நிறைவேற்றியுள்ளனர்.

இருப்பினும் இவ்வாறான நிலுவைகள் ஏற்படுவதற்கு நியாயமான காரணங்களும் உள்ளன. வரி மேல்முறையீட்டு செயல்முறையைப் போன்று , அரசாங்கத்தினால் அரச நிறுவகங்களுக்கு செலுத்த வேண்டிய வரித் தொகையில் தாமதம் ஏற்படுவதும் இதற்கு பாதிப்பாக அமையும்.

இதற்கமைவாக இந்நிலுவைத் தொகையை பெறுவதற்கு தற்போதுள்ள நீதித்துறை கட்டமைப்பு நடவடிக்கையை விரைவுபடுத்துவது அவசியம்.அரச நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய வரித் தொகையை வசூலிப்பது அல்லது அவற்றை தள்ளுபடி செய்வது குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இராஜாங்க அமைச்சர் விளக்கினார்.

# 30 கோடி பெறுமதியான போதைப்பொருளுடன் மூவர் கைது

துபாயில் பதுங்கியிருந்து நாட்டில் போதைப்பொருள் வர்த்தகத்தை வழிநடத்தும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினர் மூவர் கைதாகியுள்ளனர்.

இவர்கள், போதைப்பொருள் கடத்தல்காரரான அஹுங்கல்லே லொகு பெட்டி என்பவரின் முக்கிய நண்பர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் (09) மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் இவர்கள் கைதாகினர். காஹதுடுவ, கெபலகஹவத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்து இச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சுமார் 30 கோடி ரூபா பெறுமதியான சுமார் 13 கிலோ கிராம்

06

# லண்டன், போலந்துக்கு அனுப்புவதாக கூறி நிதி மோசடி

## சந்தேக நபரை கைது செய்ய பொதுமக்களின் உதவியை கோருகிறது பொலிஸ்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலண்டன், போலந்து உள்ளிட்ட நாடுகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதாக தெரிவித்து, நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள நபர்களிடம்

17, 500,000 ரூபாவை மோசடி செய்துள்ள நபரை கைது செய்வதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.மேற்படி நபர் வெலிக்கடை பொலிஸ் பிரிவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேசத்தில் நிறுவனம் ஒன்றை நடத்தி, இவ்வாறு பல நபர்களை ஏமாற்றி நிதி மோசடி செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை மேற்படி நிதி மோசடி தொடர்பில் மிரிஹான விசேட குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு அதிகாரிகள், விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் சந்தேக நபரான பெண் ஒருவரை கைது செய்து கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர். இந்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளி லே மேற்படி நிதி மோசடி செய்தவர் அந்த நிறுவனத்தின் உரிமையாளர் என்பது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மேற்படி சந்தேக நபரின் இருப்பிட முகவரியோ அல்லது வேறு எந்த தகவலோ இதுவரை கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபரை கைது செய்வதற்கு பொது மக்களின் உதவியை கோரியுள்ள பொலிஸார், இவர் தொடர்பில் தகவல்களை வழங்குவதற்காக தொலைபேசி இலக்கங்களையும் வழங்கியுள்ளனர். 0718591643 என்ற தொலைபேசி இலக்கத்தில் மிரிஹான பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும் 0718137373 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, மிரிஹான விசேட குற்றத்தடுப்பு பிரிவுக்கும் தகவல்களை வழங்க முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மலர்வளையம் வைக்கப்பட்ட காணொளியை சமர்ப்பிக்க நீதிமன்றம் நேற்று உத்தரவு

கொழும்பு 07 இல் உள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு முன்பாக மலர்வளையம் வைக்கப்பட்டமை தொடர்பான செம்மைப் படுத்தப்படாத காணொளிகளை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே நேற்று (10) இந்த உத்தரவைப் பிறப்பித்தார். இந்த காட்சிகளை ஒளிபரப்பிய தொலைக்காட்சி ஊடக நிறுவனங்களுக்கு கறுவாத்தோட்ட பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்கெல்லவின் மகள் சமித்ரி ரம்புக்வெல்ல, கறுவாத்தோட்ட பொலிஸில் செய்த முறைப்பாட்டிற்கு இணங்க இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அச்சுறுத்தியமை தடுக்கப்பட்டமை அல்லது அவமானப்படுத்தியதாக இந்த முறைப்பாட்டில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் சமல் சஞ்சயவுக்கு எதிராக பணிப்புரை "பீ" அறிக்கை கோரப்பட்ட போதே இந்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்தது.

# போலி நாணயத்தாள்களை அச்சிடும் இயந்திரத்தை விற்க முயன்றவர் கைது

கரவெட்டி தினகரன் நிருபர்

போலி நாணயத் தாள் அச்சிடும் இயந்திரத்தை விற்பனை செய்ய முயன்றவரை, கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர். கொழும்பிலிருந்து குடும்பத்துடன் யாழ்ப்பாணம் வந்திருந்தபோதே, இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கைதான சம்பவத்தை அறிந்த அவரின் குடும்பத்தினர் தலைமறைவாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடும்பத்தினருடன் வருகை தந்த நபர் ஒருவர் அரியாலை பகுதியில்,நாள் வாடகைக்கு வீடொன்றை பெற்றுத் தங்கியுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்நபர் திருநெல்வேலி சந்தைக்கு அண்மித்த பகுதியில், போலி நாணய தாள்களை அச்சிடும் இயந்திரம் மற்றும் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கு பயன்படும் தாள்கள் என்பவற்றை விற்பனை செய்யும் நோக்கில் காத்திருந்தார்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் நபரை கைது செய்ததுடன் அவரிடம் இருந்த பொருட்களையும் மீட்டனர். கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தவேளை, அவர் குடும்பத்துடன் அரியாலையில் தங்கியிருப்பது தெரிய வந்தது குறித்த வீட்டுக்கு

06

# விமானங்களை தாக்கும் துப்பாக்கி ரவைகள் மீட்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு தேவபுரம் பிரதேசத்தில் கிணற்றுக்குள்ளிருந்து விமானங்களை இலக்கு வைக்கக்கூடிய ரவைகள் மீட்கப்பட்டுள்ளன. பெருந்தொகையான இந்த துப்பாக்கி ரவைகளை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இது தொடர்பில் புதுக் குடியிருப்பு பொலிஸார் தெரிவிக்கையில், நேற்றைய தினம் மேற்படி கிணற்றிலிருந்து மேற்படி ரவைகள் மீட்கப்பட்டன. இந்த கிணறு இருந்த காணிக்கு உரிமையாளரான நபர், அதனை துப்புரவு செய்ய முற்பட்ட வேளையில் மேற்படி துப்பாக்கி ரவைகளை காணக் கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அவர் பொலிஸாருக்கு அறிவித்தார். இந்நிலையில் துப்பாக்கி ரவைகள் அங்கிருந்து மீட்கப்பட்டன. யுத்த காலத்

06

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 29ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 04

**குறள் தரும் சிந்தனை**

முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்
தானாம் இன்சொ லினதே அறம்

முகம் மலர நோக்கி, அகம் மலர இனிய சொற்களைக் கூறுவதே அற வழியில் அமைந்த பண்பாகும்.

# தோட்டத் தொழிலாளருக்கு கிடைத்த மகிழ்ச்சித் தகவல்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அதிகரிக்கப்பட்டுள்ள நாட்சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க முதலாளிமார் சம்மேளனம் முன்வந்துள்ளது. எனினும் நேற்று வழமை போன்றே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

என்றாலும் கடந்த மே மாதம் 21 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக வெளியிடப்பட்ட வர்த்தமானியில் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தின் நிலுவைத் தொகையை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தோட்டக் கம்பனிகள் தோட்ட நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை தோட்ட நிர்வாகங்கள் மேற்கொண்டுள்ளன. இதனை ஹட்டன் பிரதேசத்திலுள்ள தோட்ட நிர்வாக உயரதிகாரியொருவரும் உறுதிப்படுத்தி உள்ளார். இதன்படி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலையீட்டின் ஊடாக ரூ. 1700 சம்பள உயர்வு கிடைக்கப் பெறுகின்றது.

தற்போதைய பொருளாதார சூழலில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ரூ. 1700 சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தனர். பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் முதலாளிமார் சம்மேளனத்துடன் பலமட்டப் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டன. தொழிலமைச்சர் தலைமையிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இருந்த போதிலும் தொழிலாளர்களின் கோரிக்கைக்கு அமைய சம்பள உயர்வை வழங்க முதலாளிமார் சம்மேளனம் முன்வராத நிலை நீடித்து வந்தது. இது தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மே மாதம் முதலாம் திகதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொட்டகலை மேதினப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைக்கு அமைய ரூ. 1700 சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்.

அதேதினம் தொழில் ஆணையாளர் கையெழுத்திட்டு ரூ. 1700 சம்பள உயர்வுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதோடு, அது தொடர்பில் ஆட்சேபனை அல்லது கருத்து தெரிவிப்பதற்கு 15 நாட்கள் காலஅவகாசமும் முதலாளிமார் சம்மேளனத்திற்கு வழங்கப்பட்டு இருந்தது. இருப்பினும் இக்காலப்பகுதிக்குள் முதலாளிமார் சம்மேளனம் இந்த வர்த்தமானி தொடர்பில் முதலாளிமார் சம்மேளனம் உத்தியோகபூர்வமாக எதுவும் தெரிவிக்காத நிலையில், முதலாம் திகதி வெளியிடப்பட்ட ரூ. 1700 சம்பள உயர்வு வர்த்தமானியை உறுதிப்படுத்தி மே மாதம் 21 ஆம் திகதி மற்றொரு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்த வர்த்தமானிக்கு எதிராக முதலாளிமார் சம்மேளனம் நீதிமன்றத்தை நாடியது. அதற்கு நீதிமன்றம், இவ்வாறான சம்பள உயர்வு விடயங்களை உச்சநீதிமன்றம் ஏற்கனவே வலுவிழக்கச் செய்யவில்லை. அந்த அடிப்படையில் இந்த வர்த்தமானி அறிவித்தலையும் வலுவிழக்கச் செய்ய முடியாது என்று அறிவித்தது.

அந்த அடிப்படையில் மே 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 1700 சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க தோட்ட நிர்வாகங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

அந்த வகையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் தொகைப்படி சம்பளம் நேற்று வழங்கப்பட்டுள்ள போதிலும், அதிகரிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வின் நிலுவைத் தொகையை விரைவாகத் தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்குத் தேவையான அறிவுறுத்தலைகளை தோட்டக் கம்பனிகள் தோட்ட நிர்வாகங்களுக்கு வழங்கியும் உள்ளன.

முதலாளிமார் சம்மேளனத்தின் இந்த முடிவை வரவேற்றுள்ள பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஜனாதிபதிக்கும், பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

தற்போதைய பொருளாதார நி லைவரப்படி, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். அவர்களது சம்பள உயர்வுக் கோரி க்கை நியாயமானது. அதுவே அனைத்து தரப்பினரதும் கருத்தாகும், என்றாலும் அந்த சம்பள உயர்வை வழங்குவதற்கு பல மாதங்கள் முதலாளிமார் சம்மேளனம் இழுத்தடித்தமை மறைக்க முடியாத உண்மையாகும்.

ஆன போதிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி அவர்களது கோரிக்கைப்படி ரூ. 1700 சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதன் பயனாகவே பெருந்தோட்டத் தோட்டத் தொழிலாளர்களால் இந்த சம்பள உயர்வைப் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

editor.tkn@lakehouse.lk

# வடக்கு மண்ணில் தோன்றிய கண்ணியம் மிகுந்த கனவான் பேராசிரியர் துரைராஜா



**அன்னாரின் 30 ஆவது நினைவுதினம் இன்று**

இலங்கையில் 1988 செப்டெம்பர் மாதம் போர்ச்சூழல் உச்சத்தில் இருந்த வேளையில் துணிச்சலுடன் யாழ் பலகலைக்கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பை ஏற்றவர் பேராசிரியர் அழகையா துரைராசா.

யாழ் பல்கலைக்கழகத்தில் பொறியியற்பீடம் ஆரம்பிக்கப்படும் என்று அவர் பதவியேற்பதற்கான நிபந்தனையாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கொடுத்திருந்த வாக்குறுதியைப் பெற்றுக் கொண்டே அவர் பதவியேற்றுக் கொண்டார்.

யாழ்குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பின் ஊற்று அமைப்பின் முன்னோடியும், கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை உருவாக்கிய ஆளுமையுமான பேராசான் துரைராசாவின் முப்பதாவது நினைவு தினம் (ஜீன் 11) இன்றாகும்.

1990 களில் யாழ்ப்பாணம் பொருளாதாரச் சிக்கலில் தவித்திருந்த பொழுது, எல்லாத்தரத்திலான எல்லா வகையிலான கல்வியாளர்களையும், தொழில்நுட்பவியலாளர்களையும், தொழிலாளர்களையும், நிர்வாகிகளையும், சிவில் சமூகவியலாளர்களையும் ஒன்றிணைத்து பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்கால திட்டமிடலை மேற்கொண்டவர் பேராசான் துரைராசா.

தமிழ் பேசும் மக்கள் நற்சிறந்த கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காக பல்கலைக்கழக கல்வி முறையில் தொழிலாளர் கல்வி, வெளியார் கற்கை போன்றவற்றை அறிமுகப்படுத்தி யாழ் சமூகத்தை பல்கலைக்கழகம் வரை கொண்டுவந்தவர் அவர்.

வடக்கு, கிழக்கு, மலையக மக்களில் பெரும்பான்மையானோர் விவசாயிகளாக இருப்பதால் விவசாய பீடத்தை கிளிநொச்சியில் நிறுவியதில் முதன்மை வகித்தவரும் அவரே. பேராசிரியர் அவர்கள் 1994 ஆம் ஆண்டு இறுதிவரை, கொடிய நோயின் பிடியில் அகப்பட்டு இருந்தாலும், யாழ் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக அளப்பெரும் சேவை புரிந்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில், பேராசான் வதிவிடமான வடமராட்சியின் வதிரி பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு வல்லைவெளியினூடாக போர் மேகங்கள் சூழ்ந்திருந்த காலங்களில் 30 இற்கும் மேற்பட்ட கிலோமீட்டர் தூரத்தை மிதிவண்டியில் பயணித்திருந்தார். மக்களின் துன்பதுயரங்களை தனது துன்பமாக எண்ணியவர் அவர்.

அவர் யாழ்ப்பாணம் வடமராட்சியில் கம்பர்மலை என்னும் ஊரிலே, இமையாணனைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அழகையா_ செல்லம்மா தம்பதியருக்கு 1934 நவம்பர் 10 இல் பிறந்தார்.

இளமையில் ஆரம்பக்கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும், உயர்தரக்கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும், கற்று, 1953 ஜீலையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

குடிசார் பொறியியலில் 1957 ஆம் ஆண்டில் இளமாணிப் பட்டம் பெற்றார். 1958 மார்ச் வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி, நான்கு மாதங்கள் பொதுப்பணித் திணைக்களத்தில் இளைய பொறியியலாளராகப் பணியாற்றினார்.

புலமைப்பரிசில் பெற்று பேராசிரியர் கென்னத் ரொசுக்கோ வழிகாட்டலில் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவனாகச் சேர்ந்தார். ஆய்வின் மூலம் 1962 ஜுன் மாதத்தில் 'கயோலின் மற்றும் மணலின் சில வெட்டுப் பண்புகள்' என்ற தலைப்பில் பேராசான் துரைராசாவிற்கு முனைவர் பட்டம் கிடைத்தது.

கலாநிதி பட்டம் பெற்ற துரைராசா இலங்கை திரும்பும் முன்னர் லண்டனில் 1962 இல் டெரிசர்ச் என்ற நிறுவனத்தில் சிறிது காலம் பணிபுரிந்தார். பின்னர் பேராதனை பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராகச் சேர்ந்தார்.

1971 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் குடிசார் பொறியியல் பேராசிரியராக ஆவதற்கு முன்பு கனடா, வாட்டர்லூ பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

மே 1975 முதல் செப்டம்பர் 1977 வரையும், பின்னர் பெப்ரவரி 1982 முதல் பெப்ரவரி 1985 வரையும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக பணியாற்றி இருந்தார்.

ஒக்டோபர் 1977 முதல் டிசம்பர் 1978 வரை பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார். ஏப்ரல் 1987 முதல் ஓகஸ்ட் 1988 வரை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக இருந்தார்.

1988 செப்டம்பர் முதல் 1994 மார்ச் வரை துரைராசா யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றினார். மருத்துவக் காரணங்களுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து விலகி கொழும்பு சென்று அங்குள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் சிறிதுகாலம் பணியாற்றினார். 1994 ஜுன் 11 அன்று இரத்தப் புற்றுநோயினால் அவர் கொழும்பில் காலமானார்.

1986 இல் இவர் இலங்கை தேசிய அறிவியல் கல்விக்கழகத்தின் தலைவராகவும், ஒக்டோபர் 1989 முதல் அக்டோபர் 1990 வரை இலங்கை குடிசார் பொறியியல் நிறுவனத்தின் தலைவராகவும் சேவையாற்றினார். இவர் மண் பொறியியலில் நிபுணராகவும் இருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் 'அக்பர் பாலம்' பேராசிரியர் துரைராசாவினால் அமைக்கப்பட்டது. இப்பாலம் சிங்கள பேராசிரியர் ஒருவர் விடுத்த சவாலை ஏற்று மகாவலி கங்கைக்கு குறுக்கே ஒரேயொரு தூணை எழுப்பி பேராசிரியரின் தொழில்நுட்பத்தில் கட்டப்பட்டது.

மேலும் பேராசிரியர் நினைவாக பேராசிரியர் துரைராசா கிண்ணம் எனும் சுற்றுபோட்டி வருடாவருடம் பேராதனை, கொழும்பு, மொரட்டுவை பல்கலைகழகங்களுக்கிடையில் இன்றும் நடைபெற்று வருகிறது.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் 1992 இல் உருவானதும் பேராசியரின் சிந்தனையில்தான். அதன் ஸ்தாபக தலைவரும் இவரேயாவார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த துறையை ஆரம்பிப்பதற்குரிய அங்கீகாரத்தைப் பெற்று அதனை நிர்வகிக்கத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனது அயராத முயற்சியால் பேராசிரியர் துரைராசா திரட்டிக் கொண்டார்.

மேலும், பல்கலைக்கழகத்தில் உள்வாரி மாணவர்களாக படிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெறாத மாணவர்களின் நலன் கருதி வெளிவாரி நிலையத்தை பேராசிரியர் துரைராசா உருவாக்கி பயன்பெறச் செய்தார்.

**யாழ்குடா தரைக்கீழ் நீர் சேமிப்பு – ஊற்று அமைப்பு:**

1980 இல் 'ஊற்று' என்ற அமைப்பை பேராசிரியர் துரைராசா உருவாக்கி, தலைவராக செயல்பட்டு தனது முயற்சியால் பல அபிவிருத்தி திட்டங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் உருவாக்கி கிராம மக்களை முன்னேற்றினார்.

அத்துடன் யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பை ஊக்குவிக்கும் முகமாக 200 குளங்களின் வண்டல் மண் அகற்றும் திட்டம் 'நோராட்' நிறுவனத்தின் உதவியுடன் பேராசிரியர் துரைராசா மேற்கொண்டார். இதன் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி திட்ட நிதி உதவியோடு பின்தங்கிய கிராமங்களின் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு, இந்நிறுவனமும் 'கெயர்' நிறுவனமும் இணைந்து அமுலாக்கிய உணவு உற்பத்தி திட்டத்தினையும், 'போரூட்' இன் உதவியுடன் காடு வளர்ப்பு திட்ட அறிக்கை தயாரிப்பு வேலைகளும் பேராசிரியர் துரைராசா அவரின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டன.

1990 ஆம் ஆண்டின் பின் வடபகுதியின் தன்னிச்சை பொருளாதார வளங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் நிபுணர் குழுவிற்கு தலைமை தாங்கி அதனை வழிநடத்திச் செல்ல பல திட்டங்கள் பேராசிரியர் துரைராசா அவரால் தயாரிக்கப்பட்டன.

பேராசிரியர் துரைராசாவை போன்ற கனவான்கள் இம்மண்ணில் தோன்றுவது அரிது. பேராசிரியர் துரைராசா எளிமையின் சின்னமாக வாழ்ந்தவர். பெருமை, அதிகாரம் இல்லாத மனிதர் அவர்.

பேதங்கள் பாராது பிறரை மதிக்கும் நற்குணமே அவருக்கு உயர்ச்சியைக் கொடுத்தது. இறந்தும் இறவாத மனிதராக வாழ்கிறார் பேராசிரியர் துரைராசா.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# மதுரையில் சிறப்பாக நடைபெற்ற தமிழ் ஹைக்கூ மூன்றாவது மாநாடு

மதுரை உலகத் தமிழ்ச்சங்கம், தமிழ் ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கம், இனிய நந்தவனம் மாத இதழ் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தமிழ் ஹைக்கூ மூன்றாவது உலக மாநாடு மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

கவிஞர் சகா என்னும் கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற மாநாட்டின் தொடக்கவிழாவில் கவிஞர் முரா வரவேற்புரையாற்றினார். இனிய நந்தவனம் மாத இதழ் ஆலோசகர் ரொட்டேரியன், மேஜர் டோனர், டொக்டர் கே. சீனிவாசன், எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன், மகாகவி பாரதியாரின் கொள்ளுப் பேத்தி கவிஞர் உமா பாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் முனைவர் அவ்வை அருள் மாநாட்டைத் தொடங்கி வைத்து ஒரை நிகழ்த்தினார். தமிழ் ஹைக்கூ முன்னோடி ஓவியக் கவிஞர் அமுத பாரதி, கலால் சுங்கவரித்துறை உதவி ஆணையர் ஜி. வெங்கட்சுப்பிரமணியன், தமுஎகச அறம் கிளை செயலாளர் உமர் பாரூக் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.

மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் கவிஞர் நந்தவனம் சந்திரசேகரன் மற்றும் மாநாட்டு ஆலோசகர் கவிஞர் மு.முருகேஷ் ஆகியோர் மாநாட்டு நோக்கவுரை ஆற்றினர். தொடக்கவிழா அமர்வில் தூண்டில் மாநாட்டுச் சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. தூண்டில் மாநாடு சிறப்பு மலரை ஓவியக் கவிஞர் அமுதபாரதி வெளியிட இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார்.

தொடக்கவிழா நிகழ்வுகளை கவிஞர் ஜெயஸ்ரீ ஒருங்கிணைத்தார். மாநாட்டில் ஹைக்கூ வாசிப்பரங்கம், பகிர்வரங்கம், ஹைக்கூ கவிதை மற்றும் கட்டுரைகள் நூல் வெளியீட்டரங்கம், ஆகியன நடைபெற்றன. மாநாட்டு நிறைவரங்கில் அயலகத்திலிருந்து தமிழில் ஹைக்கூ படைத்து வரும் கவிஞர்களுக்கு ஹைக்கூ பேரொளி விருது வழங்கப்பட இருக்கிறது.








# நீர்வீழ்ச்சிகளைக் காணச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு எச்சரிக்கை!

மலையகத்தில் அண்மைக் காலமாக பெய்து வரும் அடைமழை காரணமாக நீரேந்து பகுதிகள், குளங்கள், ஏரிகள், நீர்வீழ்ச்சிகள் நிரம்பி பெருக்கெடுத்துள்ளன.

இந்த நிலையில் உடவளவ, ரந்தம்ப, விக்ரோறியா பொன்ற நீத்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ள அதேவேளை, ஊவா மாகாணத்திலுள்ள நீர்வீழ்ச்சிகளான ராவண எல்ல நீர்வீழ்ச்சி, கொஸ்லந்தைப் பிரதேசத்திலுள்ள தியலும நீர்வீழ்ச்சி, ஹல்துமுல்ல பிரதேசத்திலுள்ள பம்பரகந்த நீர்வீழ்ச்சி, பதுளை மீகாகஹகுயில பிரதேசத்திலுள்ள துல்ஹிந்த போன்ற நீர்வீழ்ச்சிகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன.





இவற்றைப் பார்வையிடச் செல்லும் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் மற்றும் அருகில் வசிப்போருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நீர்வீழ்ச்சிகளுக்கு அருகில் செல்வது, நீராடுவது போன்றவற்றைத் தவிர்க்குமாறு பொலிஸார் மற்றும் இடர்முகாமைத்துவ நிலையம் ஆகியவவை எச்சரிக்கை விடுத்துள்ளன.

இது இவ்வாறிருக்க இராவைணா எல்ல நீர்வீழ்ச்சி திடீரென பெருக்கெடுப்பது அதிகரித்ததில் எல்ல வெல்லவாய வீதியில் நீர்வீழ்ச்சியினை கண்டுகளிக்க வந்த உல்லாசப்பயணிகள் அச்சமடைந்தனர். பெருக்கெடுத்த நீர் வீதியில் ஒன்றரை அடிக்கு மேல் பாய்ந்தோடியது.அவர்களதுஉடைமைகள்நீரில் அடித்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எம்.ஏ.எம்.ஹசனார்
(ஊவா சுழற்சி நிருபர்)

# கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருவிழா

**பேராயரின் தலைமையில் நாளை வெஸ்பர்ஸ் ஆராதனை திருவிழா திருப்பலியும் புனிதரின் திருச்சொரூப பவனியும் நாளை மறுதினம்**



கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை வெகு விமர்சையாகக் கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை திருவிழா திருப்பலி பூசைகள் மூன்று மொழிகளிலும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளதுடன் மாலை 5.00 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி இடம் பெறவுள்ளது.

புனித அந்தோனியார் திருத்தல திருவிழா நிகழ்வுகள் ஜூன் 3 ஆம் திகதி காலை திருப்பலி பூசை இடம் பெற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து இன்று 11 ஆம் திகதி வரை நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 6.00 மணிக்கு இடம் பெற்று வருகின்றன.

நாளை 12 ஆம் திகதி மாலை பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் வெஸ்பர்ஸ் ஆராதனை நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 4:00 மணிக்கு தமிழ் மொழியில் திருப்பலியும் 5.00 மணிக்கு சிங்கள மொழியில் திருப்பலியும் மீண்டும் காலை 6.00 மணிக்கு அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் அடிகளாரினால் தமிழ் மொழியில் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

காலை 8.00 மணிக்கு தமிழில் திருவிழா திருப்பலி கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து சிங்கள மொழியில் திருவிழா திருப்பலி துணை ஆயர் பேரருட்திரு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படுவதுடன் ஆங்கில மொழியில் திருவிழா திருப்பலி மதியம் 12 மணிக்கு துணை ஆயர் பேரருட்திரு ஜே. பி அந்தனி ஆண்டகையின் தலைமையிலும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.



அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி ஆரம்பமாவதுடன் வழமையான வீதிகளில் திருச்சொரூப பவனி இடம்பெற்று இரவு 8.00 மணிக்கு திருச்சொரூப ஆசீர்வாதம் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை யின் தலைமையில் நடைபெற்று திருவிழா நிகழ்வுகள் கொடி யிறக்கத்துடன் இனிதே நிறைவு பெற வுள்ளது.

வரலாற்று பிரசித்தி பெற்ற கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல திருவிழாவில் இம்முறை நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என திருத்தலத்தின் பரிபாலகர் தெரிவித்தார்.

**எல்.ஜொனதன்**

# கடவுளிடமிருந்து விலகி இருப்பதே பாவம்

**அருட்தந்தை கிறிஸ்டோபர் அடிகளாரின் மறையுரையிலிருந்து..**

கடவுளுடன் உள்ள உறவை முறித்துக் கொண்டு அல்லது அவருடனான தொடர்பில் இருந்து பிரிந்து இருப்பது பாவம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளும் வகையில் நற்செய்தி வாசகங்கள் பல படிப்பினைகளை நமக்குத் தருகின்றன.

உலகில் அனைத்து துறைகளும் பாரிய வளர்ச்சி கண்டுள்ளன. போக்குவரத்து தொலைத்தொடர்பு உள்ளிட்ட அனைத்து துறைகளையும் இதில் நாம் குறிப்பிட முடியும்.

கடந்த 50 வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி பாரிய முன்னேற்றமாகும். ஒரு இடத்திலிருந்து இன்னொருவருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்கு அப்போதிருந்த நிலையை நாம் எண்ணிப் பார்க்கும்போது தற்போது செவ்வாய்க் கிரகம் போன்ற வேற்று கோல்களில் இருந்து சில நொடிகளில் எம்முடன் தொடர்பை ஏற்படுத்தும் அளவுக்கு தொலைத்தொடர்பு வசதிகள் தற்போது முன்னேற்றமடைந்து காணப்படுகின்றன.

தொடர்புகளுக்கான வாய்ப்புகளும் வசதிகளும் அந்தளவுக்கு முன்னேறியுள்ளன. அதை நாம் பயன்படுத்துகின்றோம்.

மனிதர்களை ஒரே குடும்பமாக இணைக்கக் கூடிய அந்த உறவில் நாம் வளர்ச்சி அடைந்துள்ளோமா? மனித உறவுகள், ஒருவர் ஒருவரருக்கிடையில் உள்ள உறவும் மனிதனுக்கும் கடவுளுக்குமான உறவும் எந்தளவு வளர்ச்சி கண்டுள்ளது?அல்லது முன்னேற்றமடைந்துள்ளது என நாம் சிந்தித்தால் அது மிக சொற்பமானதே. அதில் நாம் பின்னடைவு கண்டுள்ளோம்.நலிவடைந்துள்ளோம் என்றே கூற வேண்டும்.

50 வருடங்களுக்கு முன்னர் மேற்படி வசதிகளும் வாய்ப்புகளும் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் மனிதர்களுக்கிடையிலான உறவு பரிமாற்றங்கள் மிக பலமானதாக இருந்துள்ளது என்பதை நாம் மறக்கக்கூடாது. ஒருவர் ஒருவரை நாம் அப்போது முழுமையாக அன்பு செய்துள்ளோம். ஒருவர் ஒருவரை நாம் முழுமையாக ஏற்றுக் கொண்டிருந்தோம். ஒருவர் ஒருவரை நாம் சார்ந்திருந்தோம்.

இன்று உறவு என்று சொல்லும் போது எமது வாழ்வில் அது போலியான ஒன்றாகவே காணப்படுகிறது. வளர்ச்சி பெறவேண்டிய அந்த அடிப்படையான உறவு என்ற விடயத்தில் நாம் அனைவருமே பின்தங்கியுள்ளோம். மனித உறவில் நாம் பின் தங்கியமைக்கு பல காரணங்கள் இருக்கலாம். என்றாலும் அதில் முக்கியமான காரணம் பாவம் என்ற உணர்வு நம்மிடமிருந்து பிரிந்து சென்றது தான் அதற்கு அடிப்படையான காரணம்.

புனித பன்னிரெண்டாம் பத்திநாதர் அது தொடர்பில் கூறுகையில்; இந்த 21 ஆம் நூற்றாண்டில் மிகப்பெரிய பாவம் என்னவெனில். நாம் பாவம் செய்து விட்டோம் என்ற உணர்வை நாம் இழந்துவிட்டது தான் என்கின்றார்.

எல்லோரும் செய்கிறார்கள் நாங்களும் செய்கிறோம் யாரும் செய்யாததையா நாங்கள் செய்து விட்டோம். என்று நாம் பாவம் செய்ததற்கான காரணத்தை மிக அலட்சியமாக தெரிவிக்கின்றோம். அதுவே பாவத்தை நியாயப்படுத்தும் எமது நிலை.

நமது ஆதிப் பெற்றோர்களான ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். அன்றாடம் கடவுள் அவர்களோடு பேசினார். அவர்களும் அவருடனான ஆழமான தொடர்பைக் கொண்டிருந்தனர்.

ஆனால் அவர்கள் கடவுளுக்கு கீழ்ப்படியாமல் விலக்கப்பட்ட கனியை உண்ட பின்பு கடவுளுடனான தொடர்பை அவர்களை முறித்துக் கொள்கின்றனர்.

அந்த சமயத்தில் ஏதேன் தோட்டத்தின் வழியாக நடந்து செல்கின்ற கடவுள் வழமைபோன்று ஆதாமை அழைக்கின்றார். ‘ஆதாமே நீ எங்கே இருக்கின்றாய்?”

என்று கேட்கின்றார். அங்கு அவர்களை காணவில்லை. அவர்கள் ஒளிந்து கொண்டார்கள்.



ஏனெனில் அவர்கள் கடவுளுக்கு எதிராக பாவம் செய்ததால் கடவுளுடனான தொடர்பை முறித்துக் கொண்டதால் அந்த குற்றத்திற்காக கடவுளிடமிருந்து அவர்கள் மறைந்து கொள்கின்றார்கள். அவரை விட்டு ஒதுங்கி இருக்கிறார்கள்.

அந்த வகையில் உலகில் பாவம் என்பது கடவுளை விட்டு விலகி இருப்பதே. நம் வாழ்விலும் அவ்வாறு இருக்குமானால் அதனை நாம் நிவர்த்தி செய்து கொள்வோம். கடவுளோடு நெருங்கிய தொடர்பை தொடர்ந்தும் பேணுவோம். அதற்காக இறையருளை மன்றாடுவோம்.

**எல்.செல்வா**

# அருட்தந்தைக்கான பிரியாவிடை நிகழ்வு









ஹட்டன் புனித திருச்சிலுவை ஆலயத்தில் கடந்த ஐந்து ஆண்டு காலம் பங்குத் தந்தையாக அர்ப்பணிப்புள்ள சேவையாற்றிய அருட்தந்தை நியுமன் பீரிஸ் அடிகளார் கடந்த மே மாதத்துடன் அந்த பங்கிலிருந்து மாற்றலாகிச் சென்றார். பங்கு மக்களால் அவருக்கு பிரியாவிடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்.

படங்கள் உதவி ஆசிரியர்: மரிய அந்தனி

# இயேசுவின் இல்லத்திற்குள் நுழைதலே வாழ்வின் இலக்கு

‘இயேசுவின் இல்லத்திற்குள் நாம் நுழைய வேண்டுமெனில் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற வேண்டும்!’

நம்மைவிட்டு வெளியே நிற்கிற நம்மைத் தேடி வருகிற இயேசு, நம் வீட்டை வெற்றி கொண்டு அவருடைய வீடாக அதை மாற்றிக்கொள்கிறார். அங்கே நாம் அவருடைய தாயும் சகோதரர்களுமாக மாறுகிறோம்.

இயேசுவோடு இணைந்து நாம் அமைக்கும் இல்லம் அழியாததாக, நீடித்து நிலைக்கிற இன்பமாகத் தொடர்கிறது. இயேசுவின் வீட்டுக்குள் நுழைதலே நம் வாழ்வின் இலக்கு.

நற்செய்தியாளர் மாற்கு சிறந்த கதை சொல்லி மட்டுமல்ல. நடந்ததை அப்படியே பதிவு செய்வதிலும் வல்லவர். ஆண்டவராகிய கடவுள் நம் முதற்பெற்றோரை ஏதேன் தோட்டத்துக்குள் குடிவைக்கிறார். பாம்பின் சூழ்ச்சியால் பெண்ணும் ஆணும் விலக்கப்பட்ட கனியை உண்கிறார்கள். ‘நீ எங்கே இருக்கிறாய்?’ என்று மனிதனைத் தேடி வருகிறார் கடவுள்.

பாம்பைச் சபிக்கிற கடவுள் ‘உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்!’ என்கிறார். அன்றே, சாத்தானின் இல்லம் உடைகிறது. ‘புதிய ஏவாளின்’ (மரியாள்) வித்தாக வருகிற இயேசு



சாத்தானின் தலையைக் காயப்படுத்துகிறார்.

சாத்தானோ அவருடைய குதிங்காலைக் காயப்படுத்த, அவர்மேல் குற்றம் சுமத்த முற்படுகிறது. இவ்வாறாக ஏற்கெனவே பிளவுபட்ட சாத்தானின் அரசு இனிமேல் நிலைக்க முடியாது என்றும், சாத்தான் என்னும் வலியவரைக் கட்டக்கூடிய ஆற்றல் தனக்கே உண்டு என்றும் மொழிகிறார் இயேசு.

சாத்தானின் வீடு உடைகிறது. அவனுடைய அரசு வீழ்கிறது. அவனுடைய இல்லம் கொள்ளை போகிறது. ஆக, இயேசு சாத்தானுக்கு எதிரானவராகவும், சாத்தானைவிட வலிமையானவராகவும் இருக்கிறார். மறைநூல் அறிஞரின் குற்றச்சாட்டு பொய்யாகிறது. இயேசுவின் வீடு வலிமை வாய்ந்ததாக இருக்கிறது. அதை உடைக்க யாராலும் இயலாது.

இயேசுவின் வலிமைமிகுந்த வீட்டுக்குள் நாம் நுழைவதற்கான எளிய வழி கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவது.

இந்த ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் வாசகத்தில், கொரிந்தியருக்கு எழுதுகிற பவுல் ‘நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்துபோனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு’ இவ்வுலகில் நாம் வசிக்கும் வீட்டையும் நம் உடலையும் கூடாரம் என அழைக்கிற பவுல், நிலையான வீட்டுக்கான எதிர்நோக்கை முன்மொழிகிறார். பவுலைப் பொருத்தவரையில் ‘வீடு’ என்பது மறுவுலகம் சார்ந்தது, இறப்புக்குப் பின்னர் நாம் சென்றடைவது.

விடியலுக்காய் காத்திருக்கும் காவலரை விட, என் நெஞ்சம் என் தலைவருக்காய் ஆவலுடன் காத்திருக்கிறது.’

இயேசு அவரைவிட்டு வெளியே நிற்கிறார் எனக் கேள்விப்படுகிற அவருடைய உறவினர்கள் அவரைத் தங்களுக்குள்ளே அழைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். தாம் அல்ல, மாறாக, அவர்களே அவருக்கு வெளியே நிற்கிறார்கள் எனச் சுட்டிக்காட்டுகிறார் இயேசு.

நாம் நம்மைவிட்டு வெளியே நிற்கிற பொழுதுகள் எவை? நம்மையே ஏற்றுக் கொள்ளாதபோது, தாழ்வு மனப்பான்மை, குற்றவுணர்வு கொள்ளும்போது! பாவச் செயல்கள் பழக்கங்களாக மாற நாம் அவற்றையும் அவை நம்மையும் பற்றிக் கொள்ளும்போது! கடவுளின் திருவுளம் நிறைவேற்றுவதற்குப் பதிலாக, நம் முதற்பெற்றோர்போல அவருக்குக் கீழ்ப்படிய மறுக்கும்போது! இயேசுவைப் பழித்துரைக்கும்போது! தூய ஆவியாரைப் பழித்துரைக்கும்போது!

இப்படி நாம் வெளியே நிற்கிற பொழுதுகளில் நாம் வெளியே நிற்பதை உணராமல், ‘கடவுளுக்கு மதிமயங்கியது’ என்ற நிலையில் அவரோடு கண்டும் காணாமல் உறவுகொள்கிறோம்.

நம்மைவிட்டு வெளியே நிற்கிற நம்மைத் தேடி வருகிற இயேசு, நம் வீட்டை வெற்றி கொண்டு அவருடைய வீடாக அதை மாற்றிக்கொள்கிறார். அங்கே நாம் அவருடைய தாயும் சகோதரர்களுமாக மாறுகிறோம்.

இயேசுவோடு இணைந்து நாம் அமைக்கும் இல்லம் அழியாததாக, நீடித்து நிலைக்கிற இன்பமாகத் தொடர்கிறது. இயேசுவின் வீட்டுக்குள் நுழைதலே நம் வாழ்வின் இலக்கு.

**அருட்தந்தை இருதயராஜ்**



கொழும்பு மாவட்ட அறநெறி ஒன்றியத்தின் கூட்டம், நவகம்புர சங்கத் தமிழ் இந்து மன்றத்தின் வள்ளுவர் அறநெறி பாடசாலையில் தலைவர் தவசீலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. கொழும்பு மாவட்ட அறநெறி ஒன்றியத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான நியமனப் பத்திரம் வழங்கும் நிகழ்வும் இங்கு இடம்பெற்றது.



# தங்கத்தின் விலைகள் சடுதியாக குறைவு



நாட்டில் கடந்த சில நாட்களாக தங்கத்தின் விலை சற்று ஏற்ற, இறக்கத்துடன் பதிவாகி வருகிறது.

இதற்கமைய நேற்றைய தினம் (10) தங்கத்தின் விலையில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக, அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

24 கரட் தங்கம் ஒரு கிராமின் விலை 23,650 ரூபாவாகவும், 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 189,000 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாக, அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

22 கரட் தங்கம் ஒரு கிராமின் விலை 21,850 ரூபாவாகவும், 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 174,800 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

# கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி




தினகரன், தினகரன் வார மஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடன் கொழும்பில் இயங்கிவரும் நம்பிக்கை நற்பணி மன்றம் நடத்தும் கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணத்திற்கான அணிக்கு அறுவர் கொண்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் ஜுன் 21, 22 ஆம் திகதிகளில் பொரளை, பேஸ்லைன் வீதியிலுள்ள ரயில்வே கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் முதலாம் இடத்துக்குத் தெரிவாகி வெற்றி பெறும் அணிக்கு ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும் கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணமும் பரிசாக வழங்கப்படும். இரண்டாம் இடத்துக்கு (Runner up) தெரிவாகும் அணிக்கு 50, 000 ரூபா பணப் பரிசும் கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணமும் பரிசாக வழங்கப்படும். அது தவிர ஆட்ட நாயகனுக்கு 7000 ரூபா பணப்பரிசும் சிறந்த தொடர் நாயகனுக்கு 5000 ரூபா பணப்பரிசும் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர் ஆகியோருக்கு 3000 ரூபா பணப் பரிசும் வழங்கப்படும். இதில் 32 அணிகளுக்கு மட்டும் தான் பங்குபற்ற வாய்ப்பு வழங்கப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களை 0760095799 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஜி. சேகரிடம் அல்லது 0773867585 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம். பரமுடம் அல்லது 0771784923 என்ற தொலைபேசி இலக்கத்தில் கனகராஜிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்டத் தொழிலாளர்களின் எஞ்சிய...

வழங்குவதற்கு தோட்ட நிர்வாகங்கள் முன்வந்துள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1700 ரூபா அதிகரிப்புக்கான விசேட வர்த்தமானி கடந்த மே 01இல், வெளியிடப்பட்டது. இதனை உறுதி செய்து 02ஆவது வர்த்தமானி அறிவிப்பு மே மாதம் 21இல், வெளியிடப்பட்டது. இதற்கேற்பவே, தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு மே மாதம் 21ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதேவேளை தோட்டக் கம்பனிகள் இதனை வழங்க முடியாத நிலைப்பாட்டில், மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வர்த்தமானி அறிவிப்பை வலுவற்றதாக அறிவிக்குமாறு கோரி மனு தாக்கல் செய்திருந்தன. இந்த கோரிக்கையை மேல் நீதிமன்றம் நிராகரித்ததுடன் மனு மீண்டும் இம்மாதம் 26ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்பட விருப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வர்த்தகரிடம் 15 கோடி ரூபா...

செய்யப்பட்டுள்ளார். இதன் போது, அந்த பெண்ணுக்கு சொந்தமான சொகுசு கார், பல ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகள் மற்றும் இரண்டு மடி கணினிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வாகனங்களை இறக்குமதி செய்வதாகக் கூறிய இப்பெண், இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை சுங்கத்திலிருந்து விடுவிக்க அவசரமாக பணம் தேவைப்படுவதாக கோரி குறித்த வர்த்தகரிடம் பணம் பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பின்னர் குறித்த இப்பெண் தம்மை சந்திக்கவில்லை என, வர்த்தகர் பொலிஸில் முறைப்பாடு செய்தார். இம்முறைப்பாட்டின் பிரகாரமே, இப்பெண்ணை பொலிஸார் கைது செய்தனர்.

## முன்பள்ளி ஆசிரியர்களின் மாதாந்த...

ஆசிரியர்களுக்கு எதிர்காலத்தில் இதே கொடுப்பனவு கிடைக்குமெனவும் அவர் தெரிவித்தார். கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடியதாக தெரிவித்த அமைச்சர், முன்பள்ளி ஆசிரியர்களின் 2500 ரூபா கொடுப்பனவை 5000 ரூபாவாக அதிகரிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

## ஆரம்ப சுகாதார சேவையை பலப்படுத்த...

மரணமடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் வருடாந்தம் 60,000 பேர் நோயாளிகளாகின்றனர். அவர்களில் 4000 பேர் மரணமடைகின்றனர். ஏனைய 56,000 பேர் பல்வேறு நோய்களினால் பாதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும்,புகைத்தல் காரணமாக சுமார் 20,000 பேர் வருடாந்தம் உயிரிழப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக ஜப்பானின் ஜய்க்கா நிறுவனத்துடன் இணைந்து, எதிர்வரும் ஐந்து வருட காலங்களுக்கு 70 பில்லியன் ரூபா செலவில் நாட்டின் ஆரம்ப சுகாதார சேவையை பலப்படுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் ஒரு அம்சமாக நாடளாவிய ரீதியில் ஐந்து இருதய நோய் சிகிச்சைப் பிரிவுகளை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்திய அமைச்சர் ஜெயசங்கருடன்...

இந்திய முலீட்டுத்திட்டங்களை மீள ஆரம்பிப்பது குறித்து இங்கு ஆராயப்பட்டது. இந்த செயற்பாடுகளை ஆராய்வதற்காக விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக அமைச்சர் ஜெயசங்கர் தெரிவித்தார்.அண்டை நாடுகளுக்கு முதலிடம் கொடுக்கும் இந்தியாவின் கொள்கை குறித்தும் இச்சந்திப்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

திருகோணமலையை மையமாக கொண்டு இந்திய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள கைத்தொழில் வலயம், இந்திய முதலீட்டாளர்கள் இங்கு முதலீடுகளை மேற்கொள்ளல் பற்றி கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இந்த தொழில் வலயத்தில் இந்தியாவைத் தவிர, ஏனைய நாடுகளின் முதலீட்டாளர்களையும் உள்வாங்க இணக்கம் தெரிவிப்பதாக இந்திய அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க :

புதிய பொருளாதார மாற்றச் சட்டத்தின் மூலம் விவசாயம், சுகாதார கல்வி மற்றும் பொருளாதார முகாமைத்துவம் ஆகிய துறைகளின் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும். உண்மை மற்றும் நல்லிணக்கச் சட்ட மூலம் எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.இரு நாட்டு மீனவர்களுக்கிடையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரைவான தீர்மானம் எட்டப்படும்.

தோட்ட லயன் அறைகள், தோட்ட கிராமங்களாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும். இது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தலையீட்டின் மூலம் அந்தந்த கிராமங்களை அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஷேனுகா செனவிரத்ன, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா மற்றும் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## தமிழர்களின் இருப்பை...

தேவையில்லை. கடந்த எழுபது ஆண்டுகளுக்கு முன்னரே இதை நிறுவி விட்டோம். திரும்பத் திரும்ப இதனை நிறுவத் தேவையில்லை.

பொது வேட்பாளர் என்பது விஷப் பரீட்சை எனச் சொல்வதை விட, உதவாத விஷப்பரீட்சை என்று கூடச் சொல்ல முடியாது. இது தமிழ் மக்களின் இருப்பை இல்லாது செய்யும் விடயம். இதற்கு தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் இணங்கக் கூடாது.

சிவில் சமூகத்தை மக்கள் பிரதிநித்துப்படுத்த வில்லை.எனவே, ஆலோசனைகளை மட்டுமே சிவில் சமூகம் வழங்க முடியும். மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்களே தீர்மானிக்க வேண்டும்

மக்கள் ஆணையுள்ளவர்களே அரசியல் சாந்த தீர்மானங்களை எடுக்க வேண்டும்.எங்கள் பொறுப்பிலிருந்து மக்களை உதாசீனப்படுத்த முடியாது.இவற்றையெல்லாம் கடந்து, பொது வேட்பாளரை நிறுத்தியே தீர்வதென எவராவது ஒற்றைக்காலில் செயற்பட்டால்,அவர்களுக்கு எதிராக மக்களை விழிப்படைய செய்ய வேண்டியது எங்களுடைய பொறுப்பு.

இதற்கு எதிராக செயற்பட்டால் எங்களுக்கு துரோகி பட்டம் சூட்டிவிடுவார்கள். துரோகிப்பட்டத்திற்கு இன்று பெறுமதியே இல்லாமல் போய்விட்டது.

தமிழ் வேட்பாளர் ஒருவரை அடையாளப்படுத்தினால் அதற்கு எதிராக பிரச்சாரம் செய்ய வேண்டும். படு தோல்வி அடையும் விடயத்தை வரவேற்க வேண்டிய தேவை எமக்கு இல்லை.இது எங்களின் அரசியல் நிலைப்பாடு அல்ல. இது, எவரோ செய்த கோமாளிக் கூத்து என்றும் சுமந்திரன் எம்பி குறிப்பிட்டார்.

## இந்திய இலங்கை உறவுகளை வலுவாக...

பிரதமர் நரேந்திர மோடிக்கு அடுத்திருந்த ஆசனம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. அதேவேளை, பிரதமர் நரேந்திர மோடி ஏற்பாடு செய்திருந்த இராப்போசன விருந்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஏனைய அரச தலைவர்களும் கலந்துகொண்டனர். பதவியேற்பு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்பு தொடர்பில் இந்திய ஊடகங்கள் முக்கிய இடத்தை வழங்கியிருந்தன. புதுடில்லியின் முக்கிய சுற்றுவட்டங்களில் இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமர் மோடியின் உருவப்படத்துடனான பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஷேனுகா செனவிரத்ன, தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன மற்றும் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரும் இந்த பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டனர்.

## இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல்...

பங்களாதேஷுக்கு விவசாயத் துறை நிபுணர்கள் குழுவை பங்களாதேஷுக்கு அனுப்புவதற்கு ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க இணக்கம் தெரிவித்தார்.பங்களாதேஷில் கூட்டுறவு முறை அடிப்படையில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.

இதில் பின்பற்றப்படும் நவீன முறையை அறிந்து கொள்ளும் பொருட்டே இலங்கையிலிருந்து ஒரு குழு செல்லவுள்ளது.

பங்களாதேஷ், இலங்கைக்கிடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்தும் இச்சந்திப்பில் இரு தலைவர்களும் ஆராய்ந்தனர்.

இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நிறைவடைந்ததன் பின்னர், பங்களாதேஷுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

பங்களாதேஷின் தனியார் முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் மற்றும் இரு நாடுகளிடையேயும் படகுகள் சேவையை ஆரம்பிப்பதன் சாத்தியங்கள் குறித்தும் இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, பங்களாதேஷில் நடைபெறும் பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பங்களாதேஷ் பிரதமர் அழைப்பு விடுத்தார். மாநாடு நடைபெறும் காலப்பகுதி இலங்கையில் தேர்தல் நடைபெற இருப்பதால், பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் அந்த மாநாட்டில் பங்குபற்றுவர என, ஜனாதிபதி தெரிவித்தார்.

# இன்றைய பலன்கள்

(11.06.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :**
பொதுவாழ்வில் இருப்பவர்கள் நிதானமாக செயல்படுவது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்கள் கணக்கு வழக்குகளில் கவனமாக இருக்க வேண்டும்.

**ரிஷபம் :**
எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளுக்கு மத்தியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம் :**
ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் ஆதரவு பெருகும்.

**கடகம் :**
வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களால் பிரச்சனைகள் வரலாம்.

**சிம்மம் :**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு ஓய்வில்லாமல் உழைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கன்னி :**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். வியாபாரம் தொழில் செய்பவர்கள் எதிர்பார்த்த இலக்கை அடைவர்.

**துலாம் :**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பிறருக்கு பொறுப்புச் சொல்வதால் பிரச்சினைகள் வரலாம். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வேண்டிய முதலீடுகள் கிடைக்கும்.

**விருச்சிகம் :** பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முன்னேற்ற பாதையை நோக்கி அடியெடுத்த வைப்பர். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு கணிசமான தொகை கைகளில் புரளும்.

**தனுசு :**
வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு ஆலோசனை கைகொடுக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் மட்ட அதிகாரிகளால் நன்மை கிடைக்கும்.

**மகரம் :**
விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். தொழில் சீராக நடைபெறும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முக்கிய பிரமுகர்களின் சந்திப்பால் முன்னேற்றம் கிடைக்கும்.

**கும்பம் :**
பொழுது பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புது முயற்சிகளை யோசித்து செய்வது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு தொழில் போட்டி அதிகரிக்கும்.

**மீனம் :**
தன விரயம் அதிகரிக்கும். அதனால் பொது உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயிர் அதிகாரிகள் முக்கியத்துவம் கொடுப்பர்.

## சட்டவிரோத கட்டடங்களை அகற்றி...

அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ் சத்யானந்த இதனைத் தெரிவித்துள்ளார். மேற்படி நடவடிக்கைகளை முன்னெடுத்து கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்க பாதுகாப்பதன் மூலம் வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கொழும்பு நகரம் உள்ளிட்ட அதனை அண்டிய பிரதேசங்களில் காணப்படும் சிறு நீர் வடிகான்கள், வாய்க்கால்கள் அடைப்பெடுப்பதே வெள்ளப்பெருக்கு ஏற்படக்காரணமென இனங் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம், நகர அபிவிருத்தி அதிகார சபை, நீர்ப்பாசன திணைக்களம், மாகாண நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் மாகாண நிர்வாக நிறுவனம் ஆகியன ஒன்றிணைந்து, கொழும்பு நகர் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவது தொடர்பில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணம், கிளிநொச்சிக்கு...

விடுக்கப்பட்டுள்ளது. அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பிரதமரின் விஜயம் மற்றும் வட பகுதி மீனவத்துறைகளின் அபிவிருத்திகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

உஸ்வெட்ட கைய்யாவ, தல்தியாவ பகுதியில் அமைந்துள்ள முகத்துவாரப் பிரதேசத்தை ஆழப்படுத்தல்,கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள நாரா நிறுவனத்தின் பணிகள், சாலை, முல்லைத்தீவு, நந்திக்கடல், நாயாறு, சுண்டிக்குளம், அறுகம்பே, மட்டக்களப்பு, சிலாபம், புத்தளம், கொக்கல உள்ளிட்ட களப்புக்களை ஆழப்படுத்தல் மற்றும் வளங்களை பாதுகாத்தல் உள்ளிட்ட விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

## பாடசாலைகளில் ... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின் மீது பெற்றோர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை, பாடசாலையை பலப்படுத்துவதற்கு தொடர்ச்சியான உந்துசக்தியாக இருந்து வருகிறது.

தர்மபால அவர்களின் காலத்தில் இப் பகுதியில் ஓலைக் கொட்டகைகளில் பாடசாலைகள் நடைபெற்றன. பெற்றோர்கள், ஆசிரியர்கள் முன் வந்து, நம்பிள்ளைகளை முன்னேற்றுவதற்கு உழைத்தனர். அந்த காலகட்டத்திற்குப் பின்னர், இது போன்ற ஆயிரக்கணக்கான பாடசாலைகள் அரசாங்கப் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. அதிலிருந்து கற்றுக்கொண்டவர்கள் நம் நாட்டின் பல்வேறு துறைகளிலும் பல்கலைக் கழகங்கள் மூலமாகவும் நாட்டுக்கு சேவை செய்ய முடிந்தது.

நாம் ஒரு சவாலான எதிர்காலத்தை நோக்கி செல்கிறோம். அதுதான் பிள்ளைகள் எதிர்கொள்ளும் எதிர்காலம். பிள்ளைகள் அந்த எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் வகையில் பாடசாலையில் நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் கற்கும் சூழலை உருவாக்க வேண்டும்.

## போலி நாணய ... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் குழு விரைந்த போது, வீட்டில் இருந்தவர்கள் அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## விமானங்களை தாக்கும் ... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் பயங்கரவாத குழுக்களின் உறுப்பினர்களால் இது உபயோகிக்கப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 30 கோடி பெறுமதியான ... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹெரோயின் போதைப்பொருளும், 02 கைத்துப்பாக்கிகள் மற்றும் போலி இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்ட 02 கார்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# கண்டி - திகன வீதியில் மரமொன்று முறிந்து வீழ்ந்ததால் ஐவர் படுகாயம்



கண்டி – திகன வீதியின் கெங்கல்ல பிரதேசத்திலிருந்த பட்டுப்போன மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் ஐவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று காலை 6 மணியளவில் கெங்கல்ல பிரதேசத்தில் வீதியை அண்மித்த வெறிச்சோடிய காணியிலிருந்த பட்டுப்போன புளியம் மரமொன்று திடீரென வீதியில் விழுந்துள்ளது.

அச்சமயம் திகனவிலிருந்து கண்டி நோக்கி பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்த வான் ஒன்றும் அவ்வழியால் சென்று கொண்டிருந்த போது மரம் சரிந்து விழுவதை கண்ட வான் சாரதியால், வானின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் சென்றதால் அருகிலிருந்த சுவர் மற்றும் தொலைபேசி கோபுரம் மீது மோதியது.

அப்போது வானிலிருந்த 3 மாணவர்கள், 2 ஆசிரியர்கள் உட்பட 6 பேர் பயணம் செய்ததுடன், சாரதி படுகாயமடைந்தார்.

காயமடைந்த ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஒரே நேரத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களது நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டுப்போன மரத்தை அகற்றுமாறு காணி உரிமையாளருக்கும், பல அரச நிறுவனங்களுக்கும் அறிவித்த போதும் அவர்கள் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

## வெளிநாட்டு யுவதிக்கு பாலியல் தொந்தரவு; மசாஜ் நிலைய ஊழியர் கைது

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

மசாஜ் நிலையமொன்றுக்கு சேவையை பெற்றுக் கொள்வதற்காக சென்ற வெளிநாட்டு யுவதியொருவருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக ரம்புக்கனை ஆயுர்வேத மசாஜ் நிலைய ஊழியரொருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஈரான் நாட்டைச் சேர்ந்த 24 வயதான யுவதியும் அவருடன் வந்திருந்த மேலும் சில ஈரானியர்களும் கேகாலை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கிணங்க இவர் கைது செய்யப்பட்டுள்ளார். ரந்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதான குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனார்.

ஆயுர்வேத மசாஜ் பெறுவதற்காக இவர்கள் அனைவரும் மசாஜ் நிலையத்துக்கு சென்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## மலைச்சாரல்

# ஹற்றன் நகரில் குப்பைகளால் பொதுமக்கள் அசௌகரியம்

ஹற்றன் நகரம் தற்போது குப்பை நகரமாக மாறிவருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகளை கவரும் விதமாக அமைந்துள்ள சிவனொளிபாதமலை, சென்கிளையார், டெவோன், நுவரெலியா, எல்ல உள்ளிட்ட பிரதான சுற்றுலா பிரதேசங்களுக்கு செல்லும் அதிகமான மக்கள் ஹற்றன் ஊடாகவே பயணிக்கின்றனர்.

இந்நிலையில் ஹற்றன் நகரில் பார்த்த இடங்கள் எல்லாம் குப்பை கூளங்களாக காணப்படுவதனால் சுற்றுலாப் பயணிகள், பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்.

ஹற்றன் நகரில் பல ஆண்டுகளாக கழிவு முகாமைத்துவம் தொடர்பாக திட்டமொன்று இல்லையென மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். எனவே உரிய அதிகாரிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# நுவரெலியா இஸ்கிராப் தோட்ட வருடாந்த தேர்த் திருவிழா





**(நானுஓயா நிருபர்)**

நுவரெலியா இஸ்கிராப் தோட்டத்தில் வரம் அருளும் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய வருடாந்த தேர் திருவிழா கடந்த (07) ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

சனிக்கிழமை (08) புண்ணிய வாசகம் கிரியையுடன் பால்குட பவனி நடைபெற்று பிற்பகல் மகேஸ்வர பூஜையுடன் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை (09) சிறப்பு அபிஷேகம் இடம்பெற்று திருவிளக்கு பூஜை மற்றும் வசந்த மண்டப பூஜை நடைபெற்று தீப ஆராதனை, மேள வாத்தியங்களுடன் உற்சவ மூர்த்திகள் விநாயகப் பெருமான், முருகப் பெருமான், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆகிய தெய்வங்கள் வெளி வீதியூடாக நுவரெலியா பிரதான நகரை தேரேறி வலம் வந்தனர்.

பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். அதனை தொடர்ந்து நேற்று பச்சை சாத்துதல், மாலை மாவிளக்கு பூஜையுடன் பூங்காவன பூஜை நடைபெற்றது.

இன்று செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவமும் கரகம் வீதி உலா என்பன நடைபெற்று கொடி இறக்கத்துடன் விழா நிறைவுபெறும்.

# ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் ஓரணியில் திரளவேண்டும்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியே சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பு கவசமாகும் என ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்று பேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்குரிய துரிதமான நடவடிக்கைகளை முன்னெடுத்து தனது ஆளுமையையும், தலைமைத்துவ பண்பையும் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளதால், அவருக்கு மீண்டுமொருமுறை ஆள்வதற்குரிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடி, அரகலய உள்ளிட்ட காரணங்களால் 2022 காலப்பகுதியில் நாடு எவ்வாறு இருந்தது? நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்குரிய தலைமைத்துவத்தை ஏற்பதற்கு எந்தவொரு தலைவரும் முன்வரவில்லை. எனினும், அந்த சவாலை ரணில் விக்கிரமசிங்க ஏற்றார். அவரால் முடியாது, மீண்டும் போராட்டம் வெடிக்கும் என்றெல்லாம் குறுகிய அரசியல் நோக்கில் எதிரணிகள் விமர்சித்தன. ஆனால் சவாலை வெற்றிகரமாக எதிர்கொண்டு நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்திவருகின்றார்.

இன்று வரிசை யுகம் இல்லை. எரிபொருள் விலை, சமையல் எரிவாயு விலை என்பன குறைக்கப்பட்டுள்ளன. மின்சார கட்டணத்தை குறைப்பதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அத்தியாவசிய மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை, வெளிநாட்டு கையிருப்பும் அதிகரித்து வருகின்றது.

நாட்டில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைத்து கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளையும் அரசு செய்து கொடுக்கவுள்ளது. மக்கள் மனமறிந்த தலைவர் என்பதாலேயே ரணில் விக்கிரமசிங்கவால் இவற்றையெல்லாம் செய்ய முடிகின்றது.

இருண்ட யுகத்தில் இருந்த நாடு இன்று ஒளியை நோக்கி பயணிக்கின்றது. அதற்குரிய திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. முக்கிய பல சட்டமூலங்கள் அடுத்துவரும் நாட்களில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே, நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல ரணிலுக்கு வழிவிட வேண்டும். அவரின் பாதையை மாற்ற முற்பட்டால் அது நாட்டுக்கே ஆபத்தாக அமையும் என அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவிப்பு



**(அக்குறணை குறூப் நிருபர்)**

தேசிய மக்கள் சக்தி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பாத்ததும்பறைத் தேர்தல் தொகுதியில் 'ஐக்கிய மக்கள் அரண்' (சமகி ஜன பவுர) அமைப்பது தொடர்பாக மடவளை 'சன்சைன்' மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒருவர் வெற்றி பெறுவதாயின் 70 - 75 இலட்சம் வாக்குகளைப் பெறவேண்டும்.

அதாவது கடந்த தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ பெற்ற 69 இலட்சத்தை விட அதிகமாக பெறவேண்டும்.

எனவே அவர்கள் கடந்த காலங்களில் பெற்ற 3 அல்லது 4 இலட்சத்தை 75 இலட்சமாக அதிகரிப்பதற்கு அவர்களால் முடியாது. எனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் வெற்றி பெறுவது என்பது நடைமுறைச் சாத்தியம் அற்றது.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியால் சிறிதளவு வாக்குகளை அதிகரிப்பதன் ஊடாக அதனை அடைய முடியும். ஏனெனில் ஏற்கனவே கடந்த தேர்தலில் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்ற எமக்கு அந்த இலக்கை அடைவது நடைமுறைச் சாத்தியம் கொண்டது என்றார்.

# வடக்கின் உதயம்

வடமராட்சி கொற்றாவத்தை

# அமெரிக்கன் மிஷன் பாடசாலை திறன் வகுப்பறை திறந்துவைப்பு

**(யாழ்.விசேட நிருபர்)**



யாழ்ப்பாணத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசா கலந்துகொண்ட நிகழ்வில், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் கலந்துகொண்டிருந்தார்.

வடமராட்சி கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் திறன் வகுப்பறையை உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அந்நிகழ்வில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கலந்து கொண்டு, திறன் வகுப்பறையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் கலந்துகொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டமை தொடர்பில் அங்கஜன் இராமநாதன் தெரிவிக்கையில்,

மாவட்ட கல்வி அபிவிருத்திக்கான பங்களிப்புக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தான் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தேன்.

இதன்போது, எமது மக்களின் கல்வியை மேம்படுத்துவதன் அவசியத்தையும், அதன் இலக்கில் நாம் இருவரும் பயணிப்பதே எமக்கிடையேயான ஓர் ஒற்றுமையாக உள்ளதாக தெரிவித்தார்.

# இந்திய துணை தூதரகத்தால் யாழ்ப்பாணத்தில் யோகா தினம்!



**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் கடந்த ஜூன் 6 ஆம் திகதி இரண்டு யோகா செயல்விளக்க நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.

முதல்நிகழ்வு யாழ்ப்பாணம் தலைமைச் செயலக பணிமனையில் காலை 7:00 மணி முதல் 8:00 மணி வரையிலும், இரண்டாவது நிகழ்வு தலைமை செயலக கேட்போர் கூடத்தில் காலை 9:00 மணி முதல் 11:00 மணி வரையிலும் நடைபெற்றன.

இந்நிகழ்வுகளில் துணைத் தூதுவர் சாய் முரளி, ராம் மகேஷ் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், உதவி பிரதம செயலர் திருமதி அன்னெட் நிந்துஷா, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சுஜீவா சிவதாஸ், மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பி.வாகீசன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

## போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

**(யாழ்.விசேட நிருபர் )**

யாழ்ப்பாணத்தில் போதை மாத்திரைகள் மற்றும் வாள் என்பவற்றுடன் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டை பகுதியில் போதை மாத்திரைகள் விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் நான்கு இளைஞர்களை கைதுசெய்ததுடன், அவர்களிடமிருந்து சுமார் ஆயிரம் போதை மாத்திரைகளையும் வாள் ஒன்றினையும் மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

பிற்சேர்க்கை இல. 01

விலைமனுவை நீடிக்கும் அறிவித்தல்

1,500 கி.மீ. வீதி செயற்றிட்ட புனர்நிர்மாணத்திற்கான விலைமனுக்களுக்கான அழைத்தல்

| தொடர் இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் |
|---|---|---|
| 3 | RDA/SP/1500KM/ WP/212 | உத்துர அரவ்வள மாளிகாவத்த வீதியின் புனர்நிர்மாணம் |
| 4 | RDA/SP/1500KM/ WP/213 | ஹொன்னந்தர தக்குண கத்சிரி உயண மாவத்தையின் புனர்நிர்மாணம் |
| 5 | RDA/SP/1500KM/ WP/214 | மோதற வீதி நியுன்கம அவசானய தக்வா புனர்நிர்மாணம் |

மேற்போந்த செயற்றிட்டத்திற்கான 2024.05.02 ஆம் திகதியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கு மேலாக, விலைமனுவின் மூடும் திகதியானது 2024 ஜூன் 18 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024 ஜூன் 10 ஆம் திகதியிலிருந்து 2024 ஜூன் 17 ஆம் திகதி வரையும் **www.rda.gov.lk & mohsl.gov.lk** ஆகிய இணைய பக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,
மாகாண பணிப்பாளரின் அலுவலகம் (மேல் மாகாணம்),
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2024.06.09
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5499 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,547,872.00
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 4 9 7 0 3 2

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 074 — ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 7 0 3 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3741 — சீட்டிழுப்பு திகதி 2024.06.09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.60,831,487.96
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 21 38 48 50 — விசேட எழுத்து Y — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 86686

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1847 — 2024.06.09 — 47673 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.435,416,796.00
ஆங்கில எழுத்து V — சுப்பர் இலக்கம் 02 — வெற்றி இலக்கங்கள் 09 12 29 35
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.06.09 — சீட்டிழுப்பு இலக்கம் 0325
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 6 7 5 1 3 9
L7 எழுத்து D
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 31,117,782.04

ராசி சுப பலன் — திகதி 2024.06.09 — சீட்டிழுப்பு இலக்கம் 808 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 5,023,171.40
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 02 18 30 50 — தனயோக இலக்கம் 61049 — நாளுக்கான விதி எண் 21

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1529 — 2024.06.09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,636,378.64
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 09 15 29 35 — விசேட எழுத்து X — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 03472

# கிழக்கின் குரல்



# ஸாஹிரா கல்லூரி மாணவர்களின் பெறுபேறுகளை உடன் வெளியிடுங்கள்

## மாணவர்களின் எதிர்காலத்துடன் விளையாடுவது கவலை

திருகோணமலை ஸாஹிரா கல்லூரி உயர்தர மாணவிகளது பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டு, அம்மாணவிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தௌபீக் தெரிவித்தார்.செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

ஸாஹிராக் கல்லூரியிலிருந்து உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய எழுபது மாணவிகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெரும் சிரமத்துக்கு மத்தியில் இம்மாணவிகள் பரீட்சைக்கு தயாராகினர். பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற இம்மாணவிகளின் கனவுகளுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தப்பட்டுள்ளமை கவலையளிக்கிறது.



பர்தா அணிந்து பரீட்சை மண்டபத்திற்கு சென்றதால் அவர்களுடைய அடையாளம் சரியாக உறுதிப்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டே பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பில் பரீட்சை திணைக்களத்திற்கு சென்று உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடினேன்.

ஓரிரு வாரங்களுக்குள் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடயிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். எனவே, பெறுபேறுகளை விரைவாக வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும். திருகோணமலை தொகுதியிலுள்ள சில பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இது குறித்தும் கவனம் செலுத்துவதும் அவசியம். 1970 முதல் விவசாயம் செய்து வந்த முத்து நகர் பிரதேச மக்களின் காணிகளை தனியாருக்கு வழங்குவதற்கு முயற்சிகள் இடம்பெறுகின்றன.

இம்மக்களின் வாழ்வாதாரங்கள் இந்த விவசாய காணியிலேயே தங்கியியுள்ளது.

எனவே, இக்காணிகளை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு வழங்கி தனியாருக்கு வழங்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவேண்டும்.

# உயர்தர பரீட்சை பெறுபேறுகளில் கிழக்கிலங்கை அரபுக்கல்லூரி பெருமிதம்

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி மாணவர்கள் சகலரும் சித்தியடைந்துள்ளதாக கல்லூரியின் பதில் அதிபர் தெரிவித்துள்ளார். இக்கல்லூரியிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 16 மாணவர்களும் சகல பாடங்களிலும் சித்திபெற்று நூறு சதவீத அடைவினைப் பெற்றுள்ளனர்.

பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காகவும் விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இந்த முன்னேற்றத்துக்கு கல்லூரியின் அதிபர் மௌலவி ஏ.எல். அஷ்ரஃப் ஷர்க்கி, கற்பித்த ஆசிரியர்களான கலாநிதி யூ.எல்.எம். அஸ்லம் ஷர்க்கி, உஸ்தாத் ஏ.ஆர். எம்.றிழ்வான் நஹ்ஜி, எம்.ஐ.எம். தௌபீக், அஷ்ஷேய்ஹ் ஏ.என்.எம். ஜுனைத் நழிமி, ஜே.மபாஸ் ஆகியோரும் பெரும் பங்காற்றியுள்ளனர்.

நாட்டின் நாலா பாகங்களிலிருந்தும் வருகை தரும் மாணவர்கள் இக்கல்லூரியில் முழு நேரமாக மார்க்கக் கல்வியினை பயின்று வருகின்றனர்.

இம்மாணவர்களுக்கு பகுதி நேரமாக பாடசலைக் கல்வியும் போதிக்கப்பட்டு வருகின்றது.

# ஆதியம்மன்கேணி பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்கள்

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)



மூதூர் கல்வி வலயத்தில் உள்ள ஆதியம்மன் கேணி வித்தியாலய பாடசாலை மாணவர்களில் கற்கும் ஐம்பது வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கப்பட்டன.

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் இவை கொள்வனவு செய்யப்பட்டன.

இவற்றை மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வு அதிபர் மா. வர்ண குலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

"எழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்" எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பு இவ்வுதவியை வழங்கியது.

கடந்த இரண்டு வருடங்களாக கஷ்டப் பிரதேசங்களிலுள்ள மாணவர்களுக்கு இந்த அமைப்பு கற்றல் உபகரணங்களை வழங்கி வருகிறது.

இந்நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான,சி. காந்தன், லோ. கஜரூபன், எஸ். சுரேஸ், மா.ஜெகனாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நெல்லிக்குளம் மலையை உடைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

மூதூர் கிழக்கு, சேனையூர் கிராம சேவகர் பிரிவில் உள்ள நெல்லிக்குளம் மலைத் தொடரின் பாறைகளை உடைப்பதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இது குறித்து, சேனையூர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் பொலிஸில் முறைப்பாடும் செய்துள்ளார்.

கூலித் தொழில், நெற்செய்கை, கால் நடை வளர்ப்பு போன்ற வாழ்வாதார முயற்சிகளை நம்பி வாழ்ந்து வரும் இம்மக்கள் வாழும் இப்பிரதேசத்தில், இயற்கை வளங்களை அழிக்கும் செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது என்றும் மக்கள் தெரிவித்தனர். குளம், வயல், காடு போன்ற வளங்களை நம்பியே நாம், வாழ்கிறோம். மலையைச் சூழவுள்ள வயல்கள், மேய்ச்சல் தரை இயற்கையாக அமைந்துள்ள காட்டு வளம் என்பன மலைகளை உடைப்பதால் அழிவுறும் அபாயம் உள்ளது .மேலும்,இந்த மலையில்இந்து வழிபாட்டு அடையாளங்களும் உள்ளன. எனவே, இதை அழிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் மக்கள் கூறினர்.

சனிக்கிழமை (08) இம்மலையை உடைப்பதற்காக பாறை உடைப்பு இயந்திரங்களுடன் சிலர் வந்தபோது, உடனடியாக ஒன்றுதிரண்ட மக்கள் தங்களது எதிர்ப்புக்களை வெளியிட்டனர்.

# சர்வதேச தமிழ் மரபு அறக்கட்டளை தலைவருடன் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்திப்பு

## புலப்பெயர்வு தமிழர் நூலையும் பெற்றுக்கொண்டார்



கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான செந்தில் தொண்டமான் அண்மையில் சர்வதேச தமிழ் மரபு அறக்கட்டளை தலைவர் டொக்டர் கே.சுபாஷினியை சந்தித்து கலந்துரையாடினார். ஜேர்மனி பிராங்பேர்ட் நகரில் இச்சந்திப்பு இடம்பெற்றது.இதன்போது,"தமிழர் புலப்பெயர்வு" நூலை ஆளுநருக்கு டொக்டர் கே.சுபாஷினி வழங்கி வைத்தார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், உலக அளவில் தமிழ் விரிவாக்கத்தின் வரலாறு பற்றி இந்நூல் விபரிக்கிறது.இதையடுத்து இலங்கையில் பெருந்தோட்ட சமூகத்தின் 200 வருட முதல் நினைவு முத்திரையை டொக்டர் கே.சுபாஷினிக்கு ஆளுநர் கையளித்தார்.ஜேர்மனி பிராங்பேர்ட் நகரிலுள்ள புலம்பெயர் தமிழ் மக்களையும் சந்தித்து ஆளுநர் கலந்துரையாடினார்.

# ஆசிரியர், மாணவர்களுக்கு கௌரவம்



தோப்பூர் கோட்டத்திற்குட்பட்ட அல்தாஜ் மகா வித்தியாலயத்திலிருந்து இம்முறை பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு (10) அதிபர் முஹம்மது முகைதீன் நௌபீக் தலைமையில் இடம்பெற்றது.இதன் போது பல்கலைக்கழகம் தெரிவான 09 மாணவர்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கௌரவம் பெற்றவர்களை படத்தில் காணலாம். (படம்: தோப்பூர் குறூப் நிருபர்)

# சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலையில் புதிய கட்டடத் தொகுதிக்கு அடிக்கல்

(சாய்ந்தமருது விசேட நிருபர்)





சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலையில் அமைக்கப்படவுள்ள மூன்று மாடி கட்டடத் தொகுதிக்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் முஷர்ரபின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை (10) இந்நிகழ்வு நடந்தது.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாகவும் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எம். ஆஷிக், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் மற்றும் அவரது இணைப்பாளர் ஏ.எம். அஸாம் மௌலவி ஆகியோர் பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இக்கட்டிடத் தொகுதி வேலைத் திட்டத்திற்காக முஷாரப் எம்.பி. தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து முதற்கட்டமாக இரண்டு மில்லியன் ரூபாவையும் அவரது வேண்டுகோளின் பேரில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மூன்று மில்லியன் ரூபாவையும் ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருத்துவ சான்றிதழை பெறுமாறு அறிவுறுத்தல்

(ஒலுவில் விசேட நிருபர்)

மருத்துவ சான்றிதழ் இல்லாமல் உணவகங்களில் பணிபுரிவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என, சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஐ. எம். கபீர் தெரிவித்தார்.

இதுவரை மருத்துவ சான்றிதழ்களைப் பெறாதோர், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில், மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டு உரிய மருத்துவ சான்றிதழை பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கு மூன்று மாத கால பயிற்சிகள் ஆரம்பம்



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

புதிதாக நியமிக்கப்பட்ட கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மூன்று மாத கால பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு திங்கட்கிழமை(10 ) மட்டக்களப்பில் ஆரம்பமானது. மேலதிக அரசாங்க அதிபர் சுதசினி ஸ்ரீகாந்த் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது "பொதுச் சேவை, தேசத்தின் முன்னேற்றத்திற்கானது" எனும் கருப்பொருளின் கீழ் நடைபெறவுள்ள இப்பயிற்சி திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில், 87 கிராம உத்தியோகஸ்தர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே முரளிதரன் கலந்து கொண்டு கிராம சேவையாளர்களின் பணிகளின் முக்கியத்துவம் பற்றி விளக்கமளித்தார். இந்த பயிற்சி செயலமர்வில், மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசமான படுவான்கரைப் பகுதியில் இருந்து அதிகளவிலான புதிய கிராம சேவையாளர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஐக்கிய கிராம சேவகர் சங்கத்தின் தலைவர் எஸ்.பாலகிருஷ்ணன் மற்றும் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், வளவாளர்கள், புதிய கிராம சேவை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

# இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் போராட்டம் நடத்த தீர்மானம்



இலங்கையின் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டிருந்த சுபோதினி அறிக்கையின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காணுமாறு கோரி இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தொழிற்சங்கக் கூட்டணி போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் ஏ.ஆதம்பாவா தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் மாநாடு அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது அல்கமரூன் வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இங்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் அம்பாறை மாவட்ட செயலாளர் எம். எஸ். சத்தார், ஆசிரியர் சேவை சங்கத்தின் கல்முனை வலைய இணைப்பாளர் எஸ்.எம். ஆரிப், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் கல்முனை கல்வி வலைய செயலாளர் எம். எஸ். எம். சியாத், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கல்முனை கல்வி வலைய இணைப்பாளர் ஏ. எம். எம். சாகிர் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டனர்.

இங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஏ. ஆதம்பாவா, "எதிர்வரும் 12 ஜுன் 2024 நாடு முழுவதும் வலய மட்ட அளவில் போராட்டங்கள் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

நாங்கள் கேட்பது சம்பள அதிகரிப்பு அல்ல. சம்பள முரண்பாட்டுக்கான தீர்வுதான் எனக்கு வேண்டும். அதற்கான போராட்டமே இது" என்றார்.

அஷ்ரப் கான்
(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

# நகர்வலம்



நாத்தாண்டியாவில்

## கிராமப்புறங்களுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்குமாறு பிரதேசவாசிகள் வேண்டுகோள்

**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

புத்தளம் மாவட்டத்தின் நாத்தாண்டிய பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தும்மோதர, கொட்டராமுல்ல, நளீம்புரய, பதுவத்த, மொரகலே, பளுவல்கால மற்றும் கச்சிராவ ஆகிய கிராமங்களுக்கு குழாய் மூலமான குடிநீர் விநியோகத்தை வழங்குமாறு பிரதேசவாசிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறித்த கிராமங்களில் வசித்து வருகின்ற பொதுமக்கள் நாத்தாண்டியா, நீர்கொழும்பு, சிலாபம், மாறவில மற்றும் வென்னப்புவ ஆகிய நகரங்களில் அமைந்துள்ள தனியார் நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் தொழில் செய்து வருகின்றனர். இதன்காரணமாக அப்பிரதேசங்களில் தற்போது சனத்தொகை அதிகரித்துவருகின்றது.

இப்பிரதேசங்களிலுள்ள வீடுகள் மிகவும் நெருக்கமாகவே அமைந்துள்ளன. இதனால் வீடுகளின் சுற்றுப்புறச் சூழல்கள் மிகவும் அசுத்தமான நிலையிலேயே காணப்படுகின்றன. இப்பிரதேச மக்களில் பெரும்பாலானோரின் வாழ்வாதார நிலைமைகள் மிகவும் குறைவாகவே உள்ளன. மேலும் இப்பிரதேசங்களில் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் அபாயமும் காணப்படுகின்றது.

இதனால் வீடுகளின் கழிவுநீர் தொகுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் உட்பட வீடுகளுக்கு மிகவும் நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ள சிற்றுண்டி கடைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் போன்றவை சுற்றுச்சூழலில் தேங்கி நிற்பதனால் நிலத்தடி நீர் முற்றாக பாதிப்படையும் அபாயமும் காணப்படுகின்றது.

எனவே தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அதிகாரசபையின் குழாய் மூலமான குடிநீர் விநியோகத்துக்கு ஏற்பாடு செய்து தமக்கு உதவுமாறும் இதுதொடர்பாக உரிய உயர் அதிகாரிகள் கவனம் செலுத்துமாறும் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



இந்தியாவில் மூன்றாவது முறையாகவும் பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள நரேந்திர மோடிக்கு ஆசி வேண்டியும் இலங்கை மக்களுக்காகவும் விசேட வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக இலங்கையிலிருந்து குழுவினர் கேரளாவுக்கு பயணித்துள்ளனர். கேரளாவில் அமைந்துள்ள பிரபலமான தேவாலயமான விஷ்ணு தேவாலயத்தில் நேற்று நடைபெற்ற விசேட பூஜைகளில் இவர்கள் கலந்து கொண்டிருந்தனர். இலங்கையிலிருந்து சர்வமத குழுவின் சார்பில் சங்கைக்குரிய கலகம தம்ம ரக்ஷி ஹிமி மற்றும் பிரதி அமைச்சர் ரோஹன திசாநாயக, முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான துமிந்த திசநாயக்க ஆகியோர் வழிபாடுகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## சடலம் மீட்பு

வாத்துவ பொஹத்தரமுல்ல கடற்கரையில் அணிந்திருந்த சட்டையால் முகத்தில் கட்டப்பட்ட நிலையில் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக வாத்துவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் அடையாளம் இதுவரை காணப்படவில்லை எனவும் வாத்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

நீல நிற டெனிம் மற்றும் வெள்ளை காலுறை அணிந்த, 40 - 45 வயதுக்கு இடைப்பட்டவரின் சடலமே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் வாத்துவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மரணம் தொடர்பான விசாரணைகளை வாத்துவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உயர்தர வகுப்புகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் தேசிய வேலைத்திட்டம்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை உயர்தர வகுப்புகளுக்கு இணைத்துக் கொள்ளும் தேசிய வேலைத் திட்டம் வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் அநுராதபுரம் ஜனாதிபதி கல்லூரியில் நடைபெற்றது.

1 முதல் 13 வரை ஒவ்வொரு குழந்தையும் கட்டாயக் கல்வி பெற வேண்டும் என்ற அரசின் கொள்கையின்படி, பொதுத்தேர்வு முடிவுகளைப் பெறுவதற்கு முன்னர், குழந்தைகளின் விருப்பப்படி உயர்நிலைப் பாடங்களின் தேர்வு இங்கு நடைபெறுகிறது. இங்கு, அநுராதபுரம். ஜனாதிபதி வித்தியாலய மாணவி ருஷாலி நேத்மியின் பெயரை பாடசாலை சேர்வு இடாப்பு பட்டியலில் சேர்த்ததையடுத்து, மாணவர்களை அனுமதிக்கும் நிகழ்வு ஆரம்பமானது.



இதன்போது, மாகாண பிரதம செயலாளர் வருண சமரதிவாகர, மாகாண கல்வி மற்றும் பிரதம அ மைச்சின் செயலாளர் சிறிமே வன் தர்மசேன, மாகாண ஆளுந ர் செயலாளர் விஜய வனசிங்க, மாகாண கல்வி பணிப்பாளர் எஸ்.எம்.டபிள்யூ. சமரகோன், ஏனைய கல்வி அதிகாரிகளுடன், ஜனாதிபதி கல்லூரி அதிபர் ஜி.எம். விமல் ரத்ன மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் குழுவினர் இணைந்து கொண்டனர்.

## ஹம்பாந்தோட்டையில் துப்பாக்கி சூட்டுச் சம்பவம்; ஒருவர் பலி




ஹம்பாந்தோட்டை ஹுங்கம திஸ்ஸ வீதி, ரன்ன பிரதேசத்தில் கட்டடப் பொருட்கள் விற்பனை செய்யும் கடையின் உரிமையாளர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (09) இரவு இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதே பகுதியில் வசிக்கும் 51 வயதுடைய வர்த்தகர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் ஹார்ட்வேயார் கடை ஒன்றை வியாபாரமாக நடத்தி வந்ததாகவும், நேற்று முன்தினம் இரவு முதல் மாடியில் இருந்து கீழ் தளத்திற்கு இறங்கும் போது துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த துப்பாக்கிச் சூடு கொலையா? அல்லது தற்கொலையா? என்பது தொடர்பில் இன்னும் தெரியவரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹுங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முச்சக்கரவண்டி – ரயிலுடன் மோதி விபத்து



வத்தளை எந்தேரமுல்ல ரயில் கடவையில் முச்சக்கரவண்டி ஒன்று ரயிலுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த சாரதி சிகிச்சைக்காக ராகமை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே பகுதியில் கடந்த சனிக்கிழமை (08) காலையும் இரண்டு ரயில்களுடன் கார் மோதிய விபத்தில் இருவர் உயிரிழந்தமை குறிப்பித்தக்கது.



பொலன்னறுவை வெலிகந்த ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக தாஹிரா சபியுதீன் அண்மையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட போது எடுக்கப்பட்ட படம்.
(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## புத்தளம் மேலதிக மாவட்ட செயலாளராக சதுரக ஜயசிங்க நியமனம்

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**



புத்தளம் மாவட்ட செயலகத்தின் மேலதிக மாவட்ட செயலாளராக (காணி) நியமிக்கப்பட்ட சதுரக ஜயசிங்க, தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்ட மேலதிக செயலாளராக புதிதாக நியமிக்கப்பட்ட சதுரக ஜயசிங்க, சர்வமத தலைவர்களின் ஆசியுடன் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் முன்னிலையில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

புத்தளம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக அதிகாரிகள், சமயத்தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்துகொண்ட இவர், தேசிய மரபுரிமைகள் அமைச்சின் உதவிச் செயலாளராக தனது முதல் நியமனத்தை பெற்றுக் கொண்டார்.

அதனையடுத்து, கற்பிட்டி பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளராகவும், வண்ணாத்தவில்லு, நாத்தாண்டிய ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியுள்ளதுடன், இலங்கை நிர்வாக சேவையில் 13 வருடங்கள் நிறைவான அனுபவமுள்ள ஒருவராகவும் காணப்படுகின்றார்.

மவில்பொத அனுர மகா வித்தியாலயம், சிலாபம் சாந்த மரியா வித்தியாலயம் மற்றும் சிலீபம் ஆனந்த வித்தியாலயம் என்பனவற்றின் பழைய மாணவரான இவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கணித பிரிவு பட்டதாரியாவார்.

அத்துடன், கொழும்பு பல்கலைக் கழகத்தில் பிராந்திய அபிவிருத்தி தொடர்பில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பலா, ஈரப்பலா போன்றவற்றுக்கு அதிக கிராக்கி

**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

கடும் மழையுடன் கூடிய காலநிலை நீடிப்பதால் நீர்கொழும்பு, கொச்சிக்கடை மற்றும் தங்கொட்டுவ ஆகிய பிரதேசங்களில் மரக்கறி விலைகள் படிப்படியாக அதிகரித்து வருகின்றன. எனினும், பிரதேசவாசிகள் தமது அன்றாட உணவுகளில் மரக்கறி உணவுகளுக்கு பதிலாக மரவள்ளிக் கிழங்கு, பலா மற்றும் ஈரப்பலா போன்றவற்றை சேர்த்துக் கொண்டு நாளாந்த உணவுப்பரிமாற்றங்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் நீர்கொழும்பு தொடக்கம் நாத்தாண்டிய வரையான பிரதான வீதியோரத்தில் மரவள்ளிக் கிழங்குகளை விற்பனை செய்து வருகின்ற வியாபாரிகளை அதிகளவில் காணலாம்.

## முஸ்லிம் வர்த்தக சங்க பொருளாளர் காலமானார்

**பேருவளை விஷேட நிருபர்**



கண்டி முஸ்லிம் வர்த்தக சங்க பொருளாளரும், யஹலதன்னை குருகம தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளருமான முகம்மது ராஸிக் (வயது 62) யஹலதன்னையில் கடந்த 8ஆம் திகதி காலமானார்.

ஒரு பிள்ளையின் தந்தையான இவர், பிரபல சமூக சேவையாளருமாவார். மத்திய மாகாணத்தில் புகழ்பெற்ற தொழிலதிபரான காலஞ்சென்ற அப்துர் ரஹ்மான் லெப்பை தம்பதியின் புதல்வரான இவர், முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் மைத்துனரும் ஆவார்.

அவரது ஜனாஸா, கடந்த சனிக்கிழமை இரவு 10 மணிக்கு, யஹலதென்னை ஜுமுஆ மஸ்ஜித் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் ஜனாஸாவில், அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், ஊடகவியலாளர்கள் என்று பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

## வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பினார் குணதிலக ராஜபக்ச எம்.பி

**அக்குறணை குறூப் நிருபர்**



கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ச வைத்தியசாலையில் இருந்து வீடுதிரும்பியுள்ளார்.

ஆளும் கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்களது குழுக் கூட்டத்தின் போது கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான குணதிலக ராஜபக்கச மற்றும் மகிந்தாநந்த அலுத்கமகே ஆகியோருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் குணதிலக ராஜபக்ச காயமடைந்து நாராஹேன்பிட்டிய இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். அவரது காலில் முறிவு ஒன்று ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகின்றது.

தற்போது அவர் வீடு திரும்பியுள்ளார்.

## பொலிஸ் உத்தியோகத்தர்கள் நால்வருக்கு இடமாற்றம்

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

புத்தளத்தில் பிரதான பொலிஸ் பரிசோதகர் உட்பட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளன.

புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் கீழ் உள்ள குற்ற விசாரணை பிரிவில் கடமையாற்றும் அப்பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட நால்வரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக சில்வா தெரிவித்தார்.

ஸ்கேனர் இயந்திரமொன்றை பயன்படுத்தி புத்தளம் ஆனமடுவ பகுதியிலுள்ள வீடொன்றில் தங்கத்தை தேடி அகழ்வு பணியில் ஈடுபட்டதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.



அல் குத்புல் அக்பர் வல் கௌஸுல் அஷ்ஹர் இமாமுனா அபுல் ஹஸன் அலி அஷ் ஷாதுலி ரலியல்லாஹு அன்ஹு அன்னவர்களின் ஞாபகார்த்தமாக ஷாதுலிய்யா தரீக்கா மத்ரஸாக்களுக்கிடையில் நடைபெற்ற கட்டுரை போட்டியில் பங்குபற்றி அதில் தெரிவானவர்களுக்கு நேற்று காலி நாவின்ன அலிய்யா அரபுக் கல்லூரியில் நடைபெற்ற மனாகிப் தமாம் மஜ்லிஸில் பரிசிலும் சான்றிதழும் வழங்கிய போது எடுக்கப்பட்ட படங்கள் . கலீபதுல் குலபா மௌலவி அல்ஹாஜ் முஹம்மது ஸுஹர் பாரி அவர்களிடமிருந்த மானவர்கள் பரிசு பெறுவதை காணலாம்.



க.பொ.த உயர் தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் சிறப்பு சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கல்வி அமைச்சில் நேற்று (10) நடைபெற்றது. இந்நிகழ்வில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் அகில இலங்கை ரீதியில் நான்காமிடத்தையும் மேல் மாகாணம் மற்றும் களுத்துறை மாவட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்று சாதனை நிலை நாட்டிய பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய மாணவி பாத்திமா நிஹ்லாவும் கௌரவிக்கப்பட்டார். கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள், பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். நப்ஹான், மாணவியின் தாயார் பாத்திமா ஹரீஸியா ஆகியோரும் கலந்து கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம். **(படங்கள் பேருவளை விஷேட நிருபர்)**



# கல்வளை விநாயகர் ஆலய கொடியேற்றம் இன்று



யாழ் சண்டிலிப்பாய், கல்வளை பிள்ளையார் கோயில் 39 வருட காலமாக செயலற்றிருந்த காலத்தில் நாயன்மார்கட்டு நாகரத்தினம் அவர்களின் முயற்சியால் தியாகராசா அவர்கள் செயல்படத் தொடங்கி என்னை பணம் சேர்த்து தரும்படி வேண்டுகோள் விடுத்தார். அப்பொழுது நான் மானிப்பாய் கோவில் பற்று தலைவராக இருந்த காலம். பலர் பண உதவி செய்தார்கள். அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்தேன். அவர் கும்பாபிஷேகம் செய்து ஆலயம் சிறப்பாக இயங்கி வருகிறது.

ஆலய கொடியேற்ற வைபவம் இன்று (11.06.2024) ஆரம்பமாகி 20.06.2024 இல் இரதோற்சவம் நடைபெறவுள்ளது. சின்னத்தம்பிப் புலவர் இயற்றியருளிய நூல்கள் நான்கு. அவை மறைசையந்தாதிஇ கல்வளையந்தாதிஇ கரவை வேலன் கோவைஇ பறளை விநாயகர் பள்ளு ஆகியவையாகும்.

இவற்றில் கல்வளையந்தாதி இந்த ஆலயத்து விநாயகர் பேரில் பாடப்பட்டிருக்கிறது. இப்புராதன தலமானது முற்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த இராஜகுமாரியான மாருகப்புரவீக வள்ளி என்பவரால் யாழ்ப்பாணம் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு விநாயகர் ஆலயங்களுள் ஒன்றென கூறுவார்கள்.

இந்த ஆலயத்தின் திருவூஞ்சல் பாடல்களை யாழ்ப்பாணத் தமிழ் அரச பரம்பரையில் உதித்த அழகாண்மை வல்லவ முதலியார் பாடியுள்ளார்.

இவர் அரசன் பரநிருபசிங்கனின் மூத்த புதல்வராவார். இவரது தம்பியாரான வெற்றி வேலாயுத முதலியார் தனது ஆளுமையின் கீழிருந்த சண்டிப்பாயில் அமைந்த கல்வளை விநாயகர் பேரில் அதிக பக்தியுடையவராகிஇ கல்வளை விநாயகர் திருவூஞ்சல் எனும் திருவூஞ்சற் பாடல்களைப் பாடியுள்ளார்.

பல வருடங்களாக ஆலயத்தின் பொருளாளராகவும் செயலாளராகவும் கடமையாற்றிய காலத்தில் எமது உறவினரான வீரசிங்கம் (நைஜீரியா)இ கோயில் வாசலில் நின்று தான் என்ன திருப்பணி செய்ய வேண்டும் என்று என்னிடம் வினவினார். நான் ஆலயத்திற்கு தேர் இல்லாக் குறையை விளக்கமாகக் கூறினேன். அவர் இன்முகத்தோடு சம்மதித்தார்.

அதன்படி சித்திரத்தேர் செய்வித்து வெள்ளோட்டம் நடைபெற்றது. அப்பொழுது இந்த அற்புதத்தைப் பற்றி அடியார்களுக்கு சொற்பொழிவாற்றி மகிழ வைக்கக் கூடியதாக இருந்தது. பின்னர் படங்கள் மற்றும் சொற்பொழிவுகள் அனைத்தையும் வீரசிங்கம் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். தற்பொழுது தர்மகர்த்தா சபையினர் திறமையாக செயல்படுகின்றனர்.

**சுவாமிநாதன் தர்மசீலன் ஜே.பி**
**முன்னாள் பொருளாளர், செயலாளர்**
**தர்மகர்த்தா சபை**





யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவப் பெருவிழா நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 12 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 20ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், 21ஆம் திகதி காலை தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளன.

**(படம் : யாழ் விசேட நிருபர்)**



மண்டைதீவு கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 38ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றையதினம் யாழில் அனுஷ்டிக்கப்பட்டது. (படம்: யாழ்.விசேட நிருபர்)

## கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பு

மஹியங்கனை அல்ஹேனத் தலாவ வனப்பகுதியில் கடந்த சில காலமாக பாரியளவிலான கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருவதாக மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் அவ்விடத்தை சுற்றிவளைத்து 20,000 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் 850,750 மில்லிலிற்றர் கோடாவுடன் சந்தேகநபரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் திஸ்ஸபுர, கமகும்புர, மாபகதேவாவ பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

## டெங்கு விழிப்புணர்வு

**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ். மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகப்பிரிவுகளிலும் ஜூலை மாதம் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடந்த கூட்டத்திலேயே தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.





வடமத்திய மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் கல்விமாணி பட்டம் பெற்ற 21 பேருக்கு புதிதாக ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு மாகாண சபை கூட்ட மண்டபத்தில் ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் (10) நடைபெற்றது. இதன்போது ஆளுநர் நியமனக்கடிதங்கள் வழங்குவதை படத்தில் காணலாம்.

(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)


## கேள்விக்கான அழைப்பு

### திக்வெல்ல பிரதேச சபை – திக்வெல்ல

01. திக்வெல்ல பிரதேச சபையின் செயலாளரினால் தகைமையுள்ள மற்றும் திறன் உடைய கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்காணும் செயற்றிட்டத்திற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் | நேரடி நிர்மான செலவு (நிலையற்றது தவிர்த்து) ரூபா மில்லியன் | ஒப்பந்தக் காலம் மாதம் | சீடா தரம் | கேள்விப் பிணை (ரூபா) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| DPS/DEV/CF/02/12/2024 | திக்வெல்ல மக்கள் சந்தையை அபிவிருத்தி செய்தல் | 8.9 | 04 மாதங்கள் | C7 அல்லது அதற்கு மேல் | 90,000.00 | 10,000.00 |

02. மேலே குறிப்பிட்டவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பெயரில் 2024.07.11 வரை 9.00 மணி மற்றும் 15.00 மணிக்கிடையிலான காலத்திற்குள் எந்த அலுவலக நாட்களிலும் திக்வெல்ல பிரதேச சபை அலுவலகத்திற்கு கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்விகள், குறித்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவுறுத்தப்படும் தினம் முதல் 91 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

04. கேள்விகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென இரு பிரதிகளாக வேறுவேறு உறைகளில் இட்டு அப் பிரதிகள் இரண்டையும் மீண்டும் ஒரு உறையில் இட்டு செயலாளர், பிரதேச சபை, திக்வெல்ல என்ற முகவரிக்கு 2024.07.12ம் திகதி 14.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.

05. கிடைக்கப் பெற்றுள்ள கேள்விகள், ஏற்றுக் கொள்ளும் இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாக திக்வெல்ல பிரதேச சபை அலுவலகத்தில் திறக்கப்படுவதுடன் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கிடைக்கப்பெற்றுள்ள கேள்விகள் திறக்கப்படும்.

06. மேலதிக விபரங்களை திக்வெல்ல பிரதேச சபையின் தொ.பே.இலக்கம் 0412255275ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**திக்வெல்ல.**

## வ/ப கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ (தனியார்) நிறுவனம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

கீழ்க் காட்டப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வ/ப கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ (தனியார்) நிறுவனத்தின் சார்பாக மேல்நிலை பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| பெறுகை இல. | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலை மனுக்கள் வழங்கப்படும் காலப்பகுதி | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) மற்றும் செல்லுபடிக் காலம் | முடிவுறுத்தல் திகதி | விலைக் கோரல் முன்னோடிக் கூட்டத் திகதி |
|---|---|---|---|---|---|---|
| CLT/WK/003/2024 | வ/ப கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தில் உள்ள 15 M நிலைக்கு Tinted Glass Canopy வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் (தகுதித்தன்மை - C6 அல்லது அதற்கு மேல்) | 3,500.00 | 2024 ஜூன் 11ஆம் திகதி முதல் 2024 ஜூலை 01ஆம் திகதி வரை | ரூபா 160,000.00 2024 ஒக்டோபர் 15ஆம் திகதி வரை | 2024 ஜூலை 02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு | 2024 ஜூன் 19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு |
**வயது:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு:** HM 1-3 2016 ரூபா [86,865 - 15x2x270 – 120,915] + போக்குவரத்து உட்பட அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல கொடுப்பனவுகளும். தொடர்பாடல் கொடுப்பனவு + பயன்படுத்தாத விடுமுறைக்கான பணம், மருத்துவ நலன்புரிகள் இன்னும் பல.
(மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 209,665 ரூபாவாகவிருக்கும் - கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் வாகனம் உட்பட)

## 02. பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) – HM 1-1 - 01 வெற்றிடம்

**பணி விபரம்:**

- நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்கான சந்தைப்படுத்தல் உத்திகள் மற்றும் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துவதற்கு உதவுதல்.
- சந்தைப்படுத்தல் வரவு செலவுத் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் நிர்வகித்தல், செலவு-செயல்திறன் மற்றும் நிதி வழிகாட்டுதல்களைப் பின்பற்றுதல். பல்வேறு அலைவரிசைகளில் (டிஜிட்டல், அச்சு, ஒளிபரப்பு போன்றவை) சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களை உருவாக்குதல், செயற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றைக் கண்காணித்தல்.
- வர்த்தகநாம செய்தியிடல் மற்றும் நோக்கங்களுடன் இணக்கமான சந்தைப்படுத்தல் பொருட்கள் மற்றும் உள்ளடக்கத்தை உருவாக்க படைப்பாற்றல் குழுவுடன் ஒத்துழைத்தல். சந்தைப்படுத்தல் குழுவை வழிநடத்தி நிர்வகித்தல், உயர் செயல்திறன் மற்றும் ஈடுபாட்டை உறுதி செய்வதற்கான வழிகாட்டுதல், ஆதரவு மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குதல்.
- முன்னேற்றத்தைப் பற்றி விவாதிக்கவும், நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொள்ளவும் சவால்களை எதிர்கொள்ளவும் வழக்கமான குழு கூட்டங்களை நடாத்துதல்.
- கூட்டு மற்றும் புதுமையான குழு கலாச்சாரத்தை வளர்ப்பது, ஆக்கப்பூர்வமான சிந்தனை மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஊக்குவித்தல்.

**கல்வித் தகைமைகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல், வியாபார நிருவாகம், வியாபார முகாமைத்துவம், வர்த்தகம் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் இளமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   **அத்துடன்**

   பதவியின் விடயப்பரப்பிற்கு உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின்படிப்பு பட்டம் (முதுமாணிப் பட்டம்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவகத்தின் இணைந்த அங்கத்துவம்.

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 13 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2. பதவிக்கு இயைபான துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற நிறுவனத்தின் இணைந்த/முழுமையான அங்கத்துவம்.

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனமொன்றில் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் "முகாமைத்துவ மட்டத்திதுவ மட்டத்தில்",ஆகக் குறைந்தது 13 வருட அனுபவம்.

**வயது:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு:** HM 1-1 – 2016 ரூபா [**80,295 - 15 x 2,270 – 114,345**] + போக்குவரத்து உட்பட அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல கொடுப்பனவுகளும். தொழில்சார் கொடுப்பனவு, தொடர்பாடல் கொடுப்பனவு + பயன்படுத்தாத விடுமுறைக்கான பணம், மருத்துவ நலன்புரிகள் இன்னும் பல.
(மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 202,500.00 ரூபாவாகவிருக்கும்)

## 03. உதவிப் பொது முகாமையாளர் - செயற்பாடுகள் (ஏற்றுமதி கடன் காப்புறுதி) – HM 1-1 - 01 வெற்றிடம்

**பணி விபரம்:**

- எழுத்துறுதி, உரிமைகோரல்கள் மற்றும் அறவீடுகள் எனும் அனைத்து செயற்பாட்டு அம்சங்களை ஒட்டுமொத்தமாக மேற்பார்வை செய்தல்.
- அனைத்து கடன் காப்புறுதிகள் மற்றும் உத்தரவாதங்களுக்கான செயல் திட்டங்களை செயற்படுத்துதல்.
- பணிப்பாளர்கள் சபையினால் தேவைப்படுத்தப்படும் காலமுறை MIS அறிக்கைகள் சரியான நேரத்தில் உருவாக்குவதை மேற்பார்வை செய்தல்.
- நிலை அறிக்கைகள் மதிப்பெண் அட்டை மற்றும் அதிகமாக வாங்குபவர்களின் பொறுப்பு வரம்புகள் குறித்த பரிந்துரைகள் பற்றிய வழிகாட்டுதல்கள்.
- துறைசார் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான குறுக்கு-செயற்பாட்டு ஒருங்கிணைப்பு திறம்பட பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கான மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதல்.
- சர்வதேச காப்புறுதி நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளல்.

**கல்வித் தகைமைகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம், பொருளாதாரம், புள்ளிவிபரம் அல்லது கணிதம், வியாபார நிர்வாகம், கணக்கியல், வர்த்தகம், சட்டம் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் இளமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   **அத்துடன்**

   பதவியின் பாடப்பரப்பிற்கு உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின்படிப்புப் பட்டம் (முதுமாணிப் பட்டம்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவகத்தின் இணை அங்கத்துவம்.

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை / நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 13 வருட அனுபவம்.

2. பதவிக்கு உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற நிறுவனத்தின் இணைந்த/முழுமையான அங்கத்துவம்.

   **அத்துடன்**

   கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை / நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 13 வருட அனுபவம்.

   (காப்புறுதி பின்புலத்துடனான சட்டத்தரணியாகவிருத்தல் மேலதிக அனுகூலமாகும்)

**வயது:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**சம்பள மட்டம்:** HM 1-1 – 2016 ரூபா [80,295-15x2,270 – 114,345] + போக்குவரத்து உட்பட அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல கொடுப்பனவுகளும். தொழில்சார் கொடுப்பனவு, தொடர்பாடல் கொடுப்பனவு + பயன்படுத்தாத விடுமுறைக்கான பணம், மருத்துவ நலன்புரிகள் இன்னும் பல.
(மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 202,500.00 ரூபாவாகவிருக்கும்)

## 04. உதவிப் பொது முகாமையாளர் - (உரிமைக்கோரல் மற்றும் அறவீடுகள்) – HM 1-1 - 01 வெற்றிடம்

**பணி விபரம்:**

- உள்ளீர்ப்பு, மதிப்பீடு, விசாரணை மற்றும் தீர்மானம் உட்பட முழு உரிமைகோரல் செயன்முறையையும் மேற்பார்வையிடல்.
- நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்கும்போது சரியான நேரத்தில் உரிமைகோரல்கள் மற்றும் துல்லியமான செயலாக்கத்தை உறுதிசெய்தல்.
- செயலாக்க நேரம் மற்றும் செலவுகளைக் குறைப்பதற்கு திறமையான உரிமைகோரல்களைக் கையாளும் நடைமுறைகளை உருவாக்கி செயற்படுத்துதல்.
- போக்குகள், வடிவங்கள் மற்றும் முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காண உரிமைகோரல் தரவை மதிப்பாய்வு செய்து பகுப்பாய்வு செய்தல்.
- நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்புகளை மீட்டெடுப்பதற்கான உத்திகளை உருவாக்குதல், இதில் கீழ்ப்படுத்தல், விலக்கல் மற்றும் ஏனைய அறவீட்டு முறைகள் ஆகியவை அடங்கும்.
- மீட்பு முயற்சிகளை திறம்பட தொடர சட்ட ஆலோசகர் மற்றும் சேகரிப்பு முகவர் போன்ற உள் குழுக்கள் மற்றும் வெளிப்புற பங்குதாரர்களுடன் ஒருங்கிணைதல்.
- மீட்பு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்து, முடிவுகளை அதிகரிக்கத் தேவையான உத்திகளைச் சரிசெய்தல்.
- வங்கிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் மீட்டெடுப்புகள் மீதான மேற்பார்வையை மேற்கொள்ளல்.
- சர்வதேச மீள் காப்புறுதியாளர்கள் மற்றும் கடன் மீட்பு முகவர்களுடன் தொடர்புகொள்ளல்.

**கல்வித் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம், கணக்கியல், நிதி, வர்த்தகம் அல்லது வேறேதாவது உரித்தான துறைகளில் இளமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

பதவியின் பாடப்பரப்பிற்கு உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின்படிப்பு பட்டம் (முதுமாணிப் பட்டம்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவகத்தின் இணைந்த அங்கத்துவம்.

**மற்றும்**

கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை / நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 13 வருட அனுபவம்.

(உரிமைகோரல் மற்றும் அறவீடுகள் அனுபவத்துடன் சட்டத்தரணியாகவிருத்தல் மேலதிக அனுகூலமாகும்)

**வயது:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**சம்பள மட்டம்:** HM 1-1 – 2016 ரூபா [80,295 - 15x2,270 – 114,345] + போக்குவரத்து உட்பட அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல கொடுப்பனவுகளும். தொழில்சார் கொடுப்பனவு, தொடர்பாடல் கொடுப்பனவு + பயன்படுத்தாத விடுமுறைக்கான பணம், மருத்துவ நலன்புரிகள் இன்னும் பல.
(மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 202,500.00 ரூபாவாகவிருக்கும்)

## 05. முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் – MA 1-2 - (பின்வரும் பிரிவுகளின் 04 வெற்றிடங்கள்)

- வரவேற்பாளர் / தொலைபேசி இயக்குநர்
- கடன் காப்புறுதி செயற்பாடுகள் பிரிவு
- உரிமை கோரல் மற்றும் அறவீடுகள் பிரிவு
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு

**கல்வித் தகைமைகள்**

(அ) க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
   i. சிங்களம் / தமிழ்
   ii. ஆங்கில மொழி
   iii. கணிதம்
   மற்றும்

(ஆ) க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொது வினாத்தாள் தவிர்ந்த) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

(இ) NVQ 3ஆம் மட்டத்தில் கணனித் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு:** MA 1-2 – 2016 ரூபா [**27,910 – 10 x 300 - 7 x 350- 12 x 600 - 12 x 710 – 49,080**] + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல கொடுப்பனவுகள் + பயன்படுத்தாத விடுமுறைக்கான பணம், மருத்துவ நலன்புரிகள் இன்னும் பல.
(மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 50,710.00 ரூபாவாகவிருக்கும்)

## 06. சாரதி – PL3 - 02 வெற்றிடங்கள் (ஒப்பந்த அடிப்படையில்)

**கல்வித் தகைமைகள்:**

அதிகபட்சமாக இரண்டு அமர்வுகளில் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட கனரக வாகனத்திற்கான சாரதி உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் சாரதியாக குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவம். கார்கள் / SUV என்பவற்றைச் செலுத்துவதில் அனுபவம் மேலதிக அனுகூலமாகும்.

**வயது:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**சம்பள மட்டம்:** PL 3 – 2016 ரூபா [26,290 - 10x270 - 10x300 - 10X330 - 12x350 – 39,490] + வாழ்க்கைச் செலவுப் படி
(மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 49,090.00 ரூபாவாகவிருக்கும்)

## பொதுவான நிபந்தனைகள்:

**சகல விண்ணப்பதாரிகளும்,**

- இலங்கை பிரஜையொருவராகவிருத்தல் வேண்டும்.
- பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல், உளரீதியான தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- தேவையான வேளைகளில் நீண்டநேரம் வேலை செய்யக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
- மிகச்சிறந்த குணவியல்புகளைக் கொண்டிருத்தல்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனங்களின் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

மேற்கூறிய பதவிகளுக்கான விண்ணப்பங்களை இயைபுடைய சான்றிதழ்களின் புகைப்படப்பிரதிகளுடன் பதிவுத் தபாலில் 2024 ஜூன் 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில் 'தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர், இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம், 4ஆம் மட்டம், NDB-EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு-02' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

SLECIC

**தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர்,**
**இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,**
**4 ஆம் மட்டம், NDB-EDB கோபுரம்,**
**இல.: 42, நவம் மாவத்தை,**
**கொழும்பு-02.**

**தொலைபேசி: 011 2307519**
**தொலைநகல்: 011 2307515**
**இணையம்: www.slecic.lk**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## திருகோணமலை நகர சபை

1. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விமனுக்களை திருகோணமலை நகர சபையின் சார்பாக, பிரிவு பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம், தனி-கட்ட, தனி-உறை தபாலுறை முறை மூலம் நடத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியானது (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன 2021.02.18 ஆம் திகதியிடப்பட்ட 04/2016(iii) என்ற அரச நிதிச் சுற்றறிக்கையில் நிருணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதியை பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான தேவைப்படுத்தப்பட்டுள்ள செல்லுபடியாகும் தன்மையிலுள்ள CIDA பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த வழங்கலுக்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை திருகோணமலை, டொக்யாட் வீதி, 400 ஆம் இலக்கத்திலுள்ள நகர சபையின் செயலாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 026-2222075, தொலைநகல் இல.: 026-2220552, மின்னஞ்சல்: uctrinco@gmail.com ) மேலேயுள்ள அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கையேற்பதற்கு முன்னராக, விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
6. 2024.06.11 ஆம் திகதியிலிருந்து 2024.07.01 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் திருகோணமலை, டொக்யாட் வீதி, 400 ஆம் இலக்கத்திலுள்ள நகர சபையின் செயலாளரின் அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியமைக்கான ஆதாரத்திற்கான பற்றுச்சீட்டுக்களை திருகோணமலை, டொக்யாட் வீதி, 400 ஆம் இலக்கத்திலுள்ள நகர சபையின் செயலாளரின் அலுவலகத்திற்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று இரு பிரதிகளில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. 2024.07.02 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக திருகோணமலை, டொக்யாட் வீதி, 400 ஆம் இலக்கத்திலுள்ள நகர சபையின் பிரிவு பெறுகைக் குழுத் தலைவரை இரு பிரதிகளில் வந்தடையும் தன்மையில் கீழே குறிப்பிட்டுள்ள தொகைக்கான விலைமனுக்கோரல் ஆவண முறியொன்றுடன் விலைமனுக்கள் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள்/ அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. 2024.06.25 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு திருகோணமலை, டொக்யாட் வீதி, 400 ஆம் இலக்கத்திலுள்ள நகர சபையில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர் அவர்களின் சொந்த செலவிலேயே இக்கூட்டத்தில் பங்குபற்றலாம்.
9. ஒப்பந்தத்தை வழங்கலிள் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

| வேலையின் பெயர் | தேவைப்படும் CIDA தரம் மற்றும் நிபுணத்துவம் | பெசேவ நீங்கலாக நிர்மாண ஆகுசெலவு | ஒப்பந்தக் காலம் | விலைமனு செல்லு படியாகும் காலம் | விலைக்கோரல் ஆவண முறி | | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் | |
| திருகோணமலை உட்துறைமுக வீதியில் உத்தேசிக்கப்பட்ட பொழுதுபோக்கு அபிவிருத்திக்காக சூரிய ஒளி மின்விளக்குகளை நிறுவுதல் | சி-06 மற்றும் சி-05 (கட்டிடங்கள்) அல்லது ஈஎம் 3 | 15.54 மில். ரூபா | 45 நாட்கள் | 77 நாட்கள் | 160,000 ரூபா - வங்கி அல்லது காப்புறுதி உத்தரவாதம்/ நிர்மாண உத்தரவாத நிதியம் | 2024.10.15 ஆம் திகதியன்று வரையும் | 5,000 ரூபா |

**வி. ராஜசேகர்,**
**தலைவர்,**
**பிரிவு பெறுகைக் குழு.**
**11.06.2024.**

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

# மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர் சார்பாக கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) (மில்லியன்களில்) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Digital Lux Meter | 08 | 1.02 | 1,000.00 |
| 02 | Transistor/Mosfet/IGBT/Triac Checker | 12 | 2.29 | 1,000.00 |
| 03 | Pipe Wrench 12 inch | 10 | 1.59 | 1,000.00 |
| 04 | Voltage Tester | 13 | 1.65 | 1,000.00 |
| 05 | Multipara Monitors | 300 | 150 | 20,000.00 |
| 06 | Printers | 24 | 1.44 | 500.00 |
| 07 | Photocopy Machine | 06 | 2.40 | 500.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவிருத்தல் வேண்டும்.
4. கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் கணக்காளர் அலுவலகத்தில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக, ஒவ்வொரு விலைமனுதாரரும் 5 மில்லியன் இலங்கை ரூபாவை விஞ்சும் கேள்வியிடல் தொகையின் பொருட்டு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-06-11ஆம் திகதி முதல் 2024-07-09ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென இரு பிரதிகளில் முன்வைத்தல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறியிடப்பட்ட உறையினுள் இட்டு, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு, முத்திரைக் குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம்'' என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை 2024-07-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, உயிரியல் மருத்துவ பொறியல் சேவைகள் பிரிவு, இல. 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024.10.09ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியாக நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை வங்கி உத்தரவாதம் 2024-11-06ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. மேலதிக விபரங்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் கணக்காளரிடமிருந்து 2684732 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியல் சேவைகள் பிரிவு,**
**இல. 27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு-10.**

# இலங்கை புகையிரத சேவைகள்

## விலைமனுக்கோரல்

**தாழ்நில புகையிரத பாதையில் EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருத்தமான இரத்மலானை முற்றத்திற்கு 2,500 எண்ணிக்கையிலான உயரம் குறைந்த CONCRETE SLEEPERS மற்றும் பானதுரை முற்றத்திற்கு 2,500 எண்ணிக்கையிலான உயரம் குறைந்த CONCRETE SLEEPERS வழங்கல்**

**IFB No. - SRS F. 7972**

1. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் தவைரினால் **தாழ்நில புகையிரத பாதையில் EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருத்தமான இரத்மலானை முற்றத்திற்காக 2,500 எண்ணிக்கையிலான உயரம் குறைந்த CONCRETE SLEEPERS** வழங்குவதற்காக மற்றும் **பானதுரை முற்றத்திற்காக 2,500 எண்ணிக்கையிலான உயரம் குறைந்த CONCRETE SLEEPERS** வழங்குவதற்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. கேள்விகோரல் தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (NCB)
3. மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை **2024.06.11** ஆம் திகதி **2024.07.03** ஆம் திகதி **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் செய்ய முடியும்.

   **பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),**
   **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
   **ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
   **தொலைபேசி இல : 94(11) 2438078, 94(11) 2436818**
   **தொலைநகல் இல : 94 (11) 2432044**
   **மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
   **இணையத்தளம் : www.railway.gov.lk**

4. மனுதாரர், இலங்கை **புகையிரத சேவைக்கு 5,000 இற்கும் அதிகமான உயரம் குறைந்த CONCRETE SLEEPERS** வழங்கியிருக்க வேண்டும் அல்லது **ரூ.50 மில்லியன் ரூபாய்க்கு** மேல் மதிப்புள்ள முன் அழுத்தப்பட்ட கான்கிரீட் கம்பங்களை (pre-stressed Concrete Beams) வழங்கியிருக்க வேண்டும். இல்லையெனில் கடந்த (05) ஐந்து ஆண்டுகளில் **ரூ.500 மில்லியன் ரூபாய்க்கு** குறையாத கான்கிரீட் கம்பங்களை வழங்கியமைக்கான விலைப்பட்டியலிடப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கையின் ரயில்வே கொள்முதல் புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.31,250/-** கொள்முதல் கட்டணத்தை செலுத்தி **2024.06.11** ஆம் திகதி முதல் **2024.07.03** ஆம் திகதி காலை **பி.ப.3.00** மணிக்கு அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப் பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக **ரூ.1,750,000.00** இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. மனுக்கள் **2024.07.04** ஆம் திகதி **பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** கீழே உள்ள முகவரியில் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம். தாமதமான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஓல்கொட் மாவத்தை,**
**கொழும்பு 10.**

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
இலங்கை புகையிரத சேவைகள்,
கொள்முதல் இல.: SRS/F.7972

SEL ACNE

www.adz.lk
it's what you want

# சுற்றாடல் அமைச்சு

## ஜீ.எஸ்.எம்.பி. டெக்னிக்கல் சேர்விஸ் (தனியார்) கம்பனி

## ஜீ.எஸ்.எம்.பி. டெக்னிக்கல் சேர்விஸ் (தனியார்) கம்பனியின் கீழ் செயற்படும் யக்கல மணல் களஞ்சியத்தின் செயற்பாட்டிற்காக சேவை வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விலை கோரல்

**இலக்கம் : GSMBTS/SP/Yakkala/2024/06/01**

சுற்றாடல் அமைச்சிக் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச வர்த்தக கம்பனியான ஜீ.எஸ்.எம்.பி. டெக்னிக்கல் சேர்விஸ் (தனியார்) கம்பனியினால் யக்கல மணல் களஞ்சியத்தின் மணல் போக்குவரத்து மற்றும் மணல் விற்பனை செய்தல் செயற்பாட்டிற்காக தகைமையான சேவை வழங்குநர்களை தேர்ந்தெடுப்பதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. (இதற்காக விண்ணப்பிக்க முடிவது கம்பஹா மாவட்ட பதிவாளர்களுக்கு மட்டுமேயாகும்)

விலைமனுக்கோரல் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிப்பதன் மூலம் மே ற்கொள்ளலாம். ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக விபரங்கள் விண்ணப்பங்கள் ஜீ.எஸ்.எம்.பி. டெக்னிக்கல் சேர்விஸ் (தனியார்) கம்பனியின் விசேட செயற்றிட்டப் பிரிவு (தொ.பே. 011 - 2827850) இடம் பெற்றுக் கொள்ளலாம்.

சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட விலைகோரல் ஆவணங்கள் 2024 ஜுன் 11 முதல் 2024 ஜுன் 25 பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் கீழேயுள்ள முகவரியில் குறிப்பிடப்படும் தலைமையகத்தில் கட்டணம் செலுத்தாமலேயே பரீட்சித்து பெற்றுக் கொள்ளலாம்.

பொறியிடப்படும் விலைகோரல் ஆவணங்கள் 2024 ஜுன் 27ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது தலைமையகத்தின் விசேட செயற்றிட்டப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விலைகோரல் ஆவணங்களுடன் ரூ.10,000.00 மூலமான நிதிப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். நிதிப் பிணை இன்றிய எந்த விலைமனுக்கோரல் ஆவணங்களும் நிராகரிக்கப்படுவதுடன் தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களும் நிராகரிக்கப்படும்.

பாவனையாளர்களுக்கு குறைந்த பட்ச விலைமனுக்களின் கீழ் மணல் வழங்கக் கூடிய வழங்குநர்கள் போட்டி முறைமையின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2024 ஜுன் 27 பி.ப 3.00 இற்கு கீழ்க்காணும் முகவரியில் திறப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்படும் பிரதிநிதிகளுக்கு அவ் வேளையில் சமுகமளிக்க முடியும்.

**தலைவர்,**
**ஜீ.எஸ்.எம்.பி. டெக்னிக்கல் சேர்விஸ் (தனியார்) கம்பனி**
**இல. 569, எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே**

# கேள்வி கோரல் அழைப்பு

## 2024ம் ஆண்டிற்கான நிறையுணவு கொள்வனவு செய்தல் – II

### விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்
### வட மத்திய மாகாணம்

வட மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் 2024 வருடத்திற்குத் தேவையான கீழே விபரிக்கப்பட்டுள்ள நிறை விலங்கு உணவுகளை கொள்வனவு செய்வதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து மாகாண பணிப்பாளர்/ பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பொருட்களின் விபரம் | பெறுகை இலக்கம் | சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணை முறி (ரூபா) | கேள்விப் பிணை முறியின் செல்லுபடியாகும் காலம் கேள்வி திறக்கப்படும் தினம் முதல் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிறையுணவு வழங்குதல் Poultry Commercial layer - Grower feed | 2024/DOAPH/ NCB/AF/WF/02 (II) | 307,500.00 | 2024.11.26 | 2,500.00 |
| 02 | உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிறையுணவு வழங்குதல் Poultry Commercial layer - feed | 2024/DOAPH/ NCB/AF/WF/03 (II) | 308,000.00 | 2024.11.26 | 2,500.00 |
| 03 | திரப்பனே விலங்கு பண்ணைக்கான நிறையுணவு வழங்குதல் Poulry Commercial layer - Grower feed & Layer feed | 2024/DOAPH/ NCB/AF/TF/03 (II) | 73,500.00 | 2024.10.15 | 2,500.00 |

02. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024 ஜுன் 11 முதல் 2024 ஜுலை 01 வரை வாரத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அநுராதபுரம் கொடகே மாவத்தையில் அமைந்துள்ள விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண அலுவலகத்தில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பார்க்க முடிவதுடன் ரூபா 2500.00 மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்தி கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். கேள்வியுடன் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கு நிபந்தனையற்ற கேள்விப் பிணையொன்றை கேள்வி திறக்கப்படும் தினம் முதல் மேற்கண்டவாறு செல்லுபடியாகுமாறு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வேறு வேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு 2024 ஜுலை 02 பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு மாகாண பணிப்பாளர்/ தலைவர் பெறுகைக் குழு, மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கொடகே மாவத்த, அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது மாகாண பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விகளை சமர்ப்பிப்பது எதற்காக என்று குறிப்பிடுதல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

04. தகைமைக்குப் பின்னரான தகவுத் திறன்களில் குறிப்பிடப்படும் கேள்வி மதிப்பீட்டிற்காக கவனத்தில் கொள்ளப்படும் விடயங்களுக்கு மேலதிகமாக கொள்வனவாளரால் கோழி உணவை பயன்படுத்தி பரிசீலனை செய்வதற்கு உத்தேசிக்கப்படுகிறது. அதன் பிரகாரம் கோழியுணவு 1 கிலோ கிராமை 3 பொதிகளை கேள்வியுடன் வழங்குதல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் 2024 ஜுலை 02 பி.ப. 3.00 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு இவ் வேளையில் சமுகமளிக்கலாம். இப் பெறுகை விடயங்கள் சம்பந்தமாக வட மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொ.பே. இல. 025-2222533ஐ அழைக்குமாறு அறிவிக்கிறேன்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,**
**வட மத்திய மாகாணம், அநுராதபுரம்.**

# செயற்றிட்ட முன்மொழிவுகளுக்கான அழைப்பு

## ‘திரிலோக விஜயபத்ர’ பயிர்ச்செய்கை அடிப்படையிலான மருத்துவப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான முதலீட்டு வாய்ப்புகள்

ஏற்றுமதி நோக்கங்களுக்காக “திரிலோக விஜயபத்ர” வில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து மற்றும் அது சார்ந்த பொருட்களுக்கான உலகின் தேவையை ஆராய்வதற்கான சாத்தியக் கூறுகளை கருத்தில் கொண்டு, ‘‘திரிலோக விஜயபத்ர” வில் இருந்து மருத்துவப் பொருட்களை பயிரிட்டு உற்பத்தி செய்வதில் ஆர்வமுள்ள உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து செயற்றிட்ட முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன.

இந்த திட்டங்கள் இலங்கை முதலீட்டுச் சபை (BOI) மற்றும் ஆயுர்வேத திணைக்களம் (DOA) ஆகியவற்றின் ஒன்றிணைந்த விடயப்பரப்பிற்கு உள்ளாகும் என்பதுடன் இங்கு இலங்கை முதலீட்டு வலயத்தினால் திட்டங்களை எளிதாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் மேற்கொள்ளப்படும் என்பதுடன் ஆயுர்வேதத் திணைக்களத்தினால் மேற்பார்வை, பயிர்ச்செய்கை, உற்பத்தி, முழு செயன்முறையையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் திட்டத்திற்கான உரிமங்களை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படும்.

1961ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க ஆயுர்வேத சட்டம், 1978ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை சட்டம் மற்றும் பொருந்தக்கூடிய துணைச் சட்டங்களின் பிரகாரம் செயற்றிட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்படும்.

**அ. விண்ணப்பத்திற்கான வழிகாட்டல்கள்**

1. விண்ணப்பங்கள், கொழும்பு-01, உலக வர்த்தக மையம், மேற்குக் கோபுரம், 24ஆம் மாடியில் அமைந்துள்ள இலங்கை முதலீட்டுச் சபையின் முதலீட்டு மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து அல்லது முதலீட்டுச் சபையின் இணையத்தின் மூலம் (www.investsrilanka.com) 2024 ஜுன் 12ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம் / பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
2. வளமுள்ள விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை, இரு பிரதிகளிலான முதலீட்டுத் திட்ட முன்மொழிவுகளை கொழும்பு-01, உலக வர்த்தக மையம், மேற்குக் கோபுரம், 24ஆம் மாடியில் அமைந்துள்ள இலங்கை முதலீட்டுச் சபையின் முதலீட்டு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 2024 ஜுலை மாதம் 10ஆம் திகதி பி.ப. 1.00 மணி அல்லது அதற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. செயற்றிட்ட முதலீட்டு முன்மொழிவுகள் நிதி சாத்தியக்கூறு மற்றும் தொழில்நுட்ப மற்றும் நடைமுறை நம்பகத்தன்மையை மதிப்பிடுவதற்கு தேவையான தகவல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். அத்தகைய தகவலை வழங்க இயலாமை தகுதியிழப்பிற்குக் காரணமாக இருக்கும்.
4. விண்ணப்பங்களை ஒப்படைக்கும் நேரத்தில், வளமுள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் மீளளிக்கப்படாத கட்டணங்களைச் செலுத்த வேண்டும்:
   (i) இலங்கை முதலீட்டுச் சபைக்கு விண்ணப்பக் கட்டணமாக USD 400 (நானூறு அமெரிக்க டொலர்கள்)
   (ii) ஆயுர்வேதத் திணைக்களத்திற்கு செயற்றிட்ட மதிப்பீட்டுக் கட்டணமாக USD 1250 (ஆயிரத்து இருநூற்று ஐம்பது அமெரிக்க டொலர்கள்)

**ஆ. தகுதியான விண்ணப்பங்களுக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

திட்ட முன்மொழிவு மதிப்பீட்டிற்குப் பிறகு, தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்:

1. இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன் 2 மில்லியன் அமெரிக்க டொலர் பிணை வைப்பு. இது உரிமத்தின் காலம் முழுவதும் செல்லுபடியாகும் தன்மையில் இருக்கும்.
2. தேவையான மூலப் பிரமாணங்களை பூர்த்தி செய்வதன் பேரிலும் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் பரிந்துரையின் பேரிலும் தகுதிவாய்ந்த திட்டத்திற்கான உரிமத்தை ஆயுர்வேதத் திணைக்களம் வழங்கும்.

   செயற்றிட்டத்திற்கான உரிமக் கட்டணமாக USD 100,000 (ஒரு லட்சம் அமெரிக்க டொலர்கள்) இலங்கை ஆயுர்வேத திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டும். அதன் பிறகு ஆண்டுதோறும் உரிம புதுப்பித்தல் கட்டணம் USD 200 அறவிடப்படும்.
3. USD 500,000 (ஐந்நூறு ஆயிரம் அமெரிக்க டொலர்கள்) குறைந்தபட்ச செயற்றிட்ட முதலீடாக மேற்கொள்ள வேண்டும்.

மேலதிக தகவல்களை கொழும்பு 1, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம், நிலை 24, இலங்கை முதலீட்டுச் சபை, முதலீட்டு மதிப்பீட்டு திணைக்களம், துறைசார் அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 0094 11 2386 953, தொலைநகல் இல.: 0094 11 2427 342.

**செயலாளர்**
**முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு**

**செயலாளர்**
**சுகாதார அமைச்சு.**

12-06-2024

Daily News Classifieds, the Housewives' companion

டி20 உலகக் கிண்ணம்

# இந்தியாவிடம் தோற்ற பாகிஸ்தான் அணி முதல் சுற்றுடன் வெளியேறும் நெருக்கடி

பாகிஸ்தானுக்கு எதிரான பரபரப்பான போட்டியில் 6 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இந்திய அணி டி20 உலகக் கிண்ணத்தின் சுப்பர் 8 சுற்றை நெருங்கி இருக்கும் அதே நேரம், முதல் இரு போட்டிகளிலும் தோல்வியை சந்தித்த பாகிஸ்தான் அணி முதல் சுற்றுடனேயே வெளியேறும் நெருக்கடியை சந்தித்துள்ளது.

டி20 உலகக் கிண்ணத்தில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஏ குழுவுக்கான இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி 35 ஆயிரம் ரசிகர்கள் கூடி இருந்த நியூயோர்க் மைதானத்தில் நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

மழையால் ஏற்பட்ட தாமதத்திற்குப் பின்னர் ஆரம்பமான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இந்திய அணியை 19 ஓவர்களில் 119 ஓட்டங்களுக்கு சுருட்ட பாகிஸ்தானால் முடிந்தது.

வேகப்பந்து வீச்சாளர்களான ஹரிஸ் ரவுப் மற்றும் நசீம் ஷா இருவரும் 21 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.



விக்கெட் காப்பாளர் ரிஷாப் பன்ட் பெற்ற 42 ஓட்டங்களுடனேயே இந்தியாவால் ஸ்திரமான ஓட்டங்களை பெற முடிந்தது.

பதிலெடுத்தாடிய பாகிஸ்தான் அணி மேலும் ஆறு ஓவர்கள் மிச்சமிருந்தபோது 80 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து வலுவான நிலையில் இருந்தது. மொஹமட் ரிஸ்வான் நிதானமாக ஆடி வெற்றி இலக்கை நெருங்கி வந்தார். எனினும் பூம்ராவின் அபார பந்துக்கு அவர் 31 ஓட்டங்களுக்கு போல்டானதை அடுத்து ஆட்டம் திசைதிரும்பியது. கடைசி ஓவருக்கு 18 ஓட்டங்களை பெற வேண்டி ஏற்பட்டபோது சிறப்பாக பந்துவீசிய ஆர்ஷ்தீப் சிங், பாக். அணிக்கு 10 ஓட்டங்களையே விட்டுக்கொடுத்தார்.

டி20 உலகக் கிண்ணத்தில் இந்திய அணி, பாகிஸ்தானை எதிர்கொண்ட ஒன்பது போட்டிகளில் ஏழு ஆட்டங்களில் வென்றிருப்பதோடு பாகிஸ்தான் அணியால் ஒரு போட்டியிலேயே வெல்ல முடிந்துள்ளது.

பாகிஸ்தான் அணி ஏற்கனவே அமெரிக்காவுடன் முதல் போட்டியில் தோற்ற நிலையில் அந்த அணி சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேற எஞ்சிய இரண்டு போட்டிகளிலும் வென்று மற்ற போட்டி முடிவுகள் தமக்கு சாதகமாக அமைய வேண்டி உள்ளது.

முதல் இரு போட்டிகளிலும் வெற்றியீட்டி இருக்கும் இந்திய அணி எஞ்சிய இரண்டு ஆட்டங்களில் ஒன்றில் வென்றால் அடுத்த சுற்றுக்கு முன்னேறிவிடும்.

## கிழக்கு உதைபந்தாட்டத்தில் தம்பலகாமம் அணி வெற்றி



புதிய காத்தான்குடி, கந்தளாய் தினகரன் நிருபர்கள்

கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட உதைப்பந்தாட்ட போட்டியில் திருகோணமலை தம்பலகாமம் பிரதேச அணி வெற்றியீட்டியது.

48ஆவது தேசிய விளையாட்டு விழாவிற்கான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமாக இடம்பெற்ற இந்தப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த வாரம் (05) மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது. இதில் மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச அணியை எதிர்கொண்ட தம்பலகாமம் அணி 5–4 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

வெற்றி பெற்ற தம்பலகாமம் அணி யாழ்பாணத்தில் இடம்பெறவுள்ள தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எல்லே போட்டி: சம்பியனானது கிண்ணியா அலிகார் மகளிர்

கிண்ணியா மத்திய நிருபர்



வலையமட்ட விளையாட்டுப் போட்டியின் பெண்களுக்கான எல்லே போட்டியில் கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

இறுதிப் போட்டியில் அல் இர்பான் மகா வித்தியாலய அணியை 3:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று, மாகாண மட்ட போட்டியில் விளையாடுவதற்கான தகுதியை பெற்றுக் கொண்டது.

## கிழக்கின் குரல்



# காசா போர் நிறுத்த முயற்சியாக மீண்டும் பிராந்தியத்திற்கு விரைந்தார் பிளிங்கன்

## இஸ்ரேலிய போர் கால அமைச்சர் இராஜினாமா

இஸ்ரேலின் போர்க் கால அமைச்சரவையில் இருந்து ஒரே மையவாத சக்தியாக உள்ள அமைச்சர் பென்னி காண்ட்ஸ் பதவி விலகி பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் தீவிர வலதுசாரி கூட்டணி அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தி இருக்கும் நிலையில் காசாவில் புதிய போர் நிறுத்த முயற்சியாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் மீண்டும் ஒருமுறை பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

டெல் அவிவில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தனது பதவி விலகலை அறிவித்த, காண்ட்ஸ் கனத்த மனதுடன் இந்த முடிவை எடுத்ததாக தெரிவித்துள்ளார்.

'துரதிருஷ்டவசமாக, வலிமிகுந்த தற்போதைய நெருக்கடிக்கான நியாயமான வெற்றி ஒன்றை அடைவதில் இருந்து நெதன்யாகு எம்மை தடுத்து வருகிறார்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். புதிய தேர்தலுக்கான திகதியை அறிவிக்கும்படியும் அவர் நெதன்யாகுவை கேட்டுள்ளார்.

எக்ஸ் சமுகதளத்தில் பதிலளித்திருக்கும் நெதன்யாகு, 'பென்னி, இது விலகும் நேரமல்ல இணைவதற்கான நேரம்' என்றார்.

நெதன்யாகுவின் அரசியல் போட்டியாளரான காண்ட்ஸ், இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளின் முன்னாள் தலைமை பணியாளருமாவார். அவரது மையவாத தேசிய ஐக்கிய கட்சி, காசாவில் போர் தொடுக்கும் வரை எதிர்க் கட்சியில் இருந்த நிலையில், நெதன்யாகுவின் அவசர கால அரசில் இணைந்தார்.

இந்த அவசரகால அரசில் தேசிய ஐக்கிய கட்சி ஐந்து பதவிகளை வகிந்து வந்தது.

எனினும் காண்ட்ஸின் விலகல் இஸ்ரேலின் கூட்டணி அரசை கவிழ்க்காது. 120 இடங்கள் கொண்ட இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் நெதன்யாகுவுக்கு தொடர்ந்தும் 64 ஆசனங்கள் உள்ளன. எனினும் இது பிரதமரை மேலும் தனிமைப்படுத்துவதாகவும் போர் காரணமாக இஸ்ரேலுக்குள் ஏற்பட்டிருக்கும் அரசியல் பிளவை மேலும் தீவிரப்படுத்துவதாகவும் பார்க்கப்படுகிறது.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் யயிர் லபிட், காண்ட்ஸின் முடிவை 'முக்கியமானது மற்றும் சரியானது' என்று சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

காசா போர் நீடித்து வரும் நிலையில் நெதன்யாகுவுக்கு இஸ்ரேலுக்குள் நெருக்கடி அதிகரித்து வரும் நிலையிலேயே இந்தப் பதவி விலகல் இடம்பெற்றுள்ளது.

காண்ட்ஸின் பதவி விலகலை அடுத்து தீவிர வலதுசாரியான தேசிய பாதுகாப்பு அமைச்சர் இடாமர் பென் கிவிர், போர்க் கால அமைச்சரவையில் இடம் கோரியுள்ளார். இஸ்ரேலின் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் கிவிர், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முன்வைத்திருக்கும் போர் நிறுத்தத் திட்டத்தை ஏற்றால் அரசில் இருந்து விலகுவதாக எச்சரித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் காசாவில் பிடித்த வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிக்கும் உடன்படிக்கை ஒன்றுக்கு செல்லுபடி அரசுக்கு அழுத்தம் கொடுத்து இஸ்ரேலில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

### தொடரும் இழுபறி

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு பைடன் வெளியிட்ட திட்டத்தில் இழுபறி நீடிக்கும் சூழலில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் பிளிங்கன் மத்திய கிழக்கிற்கு திரும்பியுள்ளார்.

10 நாட்களுக்கு முன்னர் வழக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு ஹமாஸ் தரப்பில் இருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை. இந்நிலையில் கடந்த ஒக்டோபர் 7 இல் காசா போர் வெடித்தது தொடக்கம் எட்டாவது முறையாகவே பிளிங்கன் நேற்று பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது அவர் எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசியை கெய்ரோவில் சிந்தித்த பின்னர் இஸ்ரேல், ஜோர்தான் மற்றும் கட்டாருக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.



இஸ்ரேல் கடந்த சனிக்கிழமை மேற்கொண்ட நான்கு பணயக்கைதிகளை விடுவித்த படை நடவடிக்கையில் பெரும் எண்ணிக்கையான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டதற்கு அமெரிக்க ஜனாதிபதி பைடன், பிளிங்கன் மற்றும் மற்ற அமெரிக்க அதிகாரிகள் பாராட்டு வெளியிட்ட நிலையில் இந்தப் படை நடவடிக்கை போர் நிறுத்த முயற்சிக்கு மேலும் முட்டுக்கட்டையை ஏற்படுத்தியுள்ளது. 'இந்த குறிப்பிட்ட (போர் நிறுத்த) நடவடிக்கையை ஹமாஸ் எப்படி செயற்படுத்தும் மற்றும் அது இதற்கு ஆம் என்று கூறுமா அல்லது இல்லை என்று குறிப்பிடுமா என்பதை கூறுவதற்கு கடினமாக உள்ளது' என்று பைடனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சுலிவன் குறிப்பிட்டுள்ளார்.

'ஹமாஸிடம் இருந்து எமக்கு உத்தியோகபூர்வ பதில் ஒன்று இன்னும் கிடைக்கவில்லை' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பைடன் முன்வைத்திருக்கும் மூன்று கட்ட போர் நிறுத்தத் திட்டத்தில், காசாவில் இருந்து இஸ்ரேலியப் படைகள் முழுமையாக வாபஸ் பெறுவதற்கு வழிவகுக்கும் வகையில் மேலும் பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டு, தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

'சர்வதேச சமூகம் ஒரே குரலில் பேசினால், ஹமாஸ் சரியான பதிலை வழங்குவதற்கு போதுமானதாக இருக்கும் என்று நாம் நம்புகிறோம்' என்று சுலிவன் ஏ.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

எனினும் இந்தத் திட்டத்திற்கு இஸ்ரேல் தரப்பிலும் பெரும் முட்டுக்கட்டை இருந்து வருகிறது. இஸ்ரேல் அரசின் தீவிர வலதுசாரிகள் இந்தத் திட்டத்தை எதிர்த்து வருவதோடு பிரதமர் நெதன்யாகுவும் சந்தேகத்தை வெளியிட்டு வருகிறார். முன்வைக்கப்பட்டிருக்கும் திட்டம் சரியானது அல்ல என்றும் ஹமாஸ் ஒழிக்கப்படும் வரை போரை நிறுத்தாது என்றும் நெதன்யாகு வலியுறுத்தி உள்ளார்.

இந்நிலையில் காசா போரை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்கும்படி ஹமாஸ் மூத்த அதிகாரி ஒருவரான சமி அபூ சுஹ்ரி அழைப்பு விடுத்துள்ளார். 'காசாவில் போரை நிறுத்துவதற்கு அமெரிக்க நிர்வாகம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு அழுத்தம் கொடுக்க நாம் அழைப்பு விடுப்பதோடு போரை முடிவுக்குக் கொண்டுவரும் என்ற ஒரு முயற்சியை ஹமாஸ் சாதகமாகவே பார்க்கும்' என்று அவர் கூறியுள்ளார்.

### 248 ஆவது நாளாகவும் தாக்குதல்

காசாவில் 248 ஆவது நாளாகவும் இஸ்ரேலின் தாக்குதல்கள் நேற்றும் (10) தொடர்ந்த நிலையில் தெற்கு நகரான ரபாவில் இஸ்ரேலின் பீரங்கி தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

காசா நகரின் கிழக்குப் பகுதியான சுஜையாவில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று இடம்பெற்ற வான் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் தீவிர படை நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் இஸ்ரேலியப் படை, அங்கு மேற்காக ஊடுருவ முயன்று வருவதாகவும், சனநெரிசல் மிக்க பகுதியாகவும் பலஸ்தீன போராளிகளின் கோட்டையாகவும் இருக்கும் ஷபூரா முகாமின் விளிம்பை அடைந்திருப்பதாகவும் அங்குள்ள குடியிருப்பாளர்கள் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர்.

காசாவின் எகிப்துடனான ஒட்டுமொத்த எல்லைப் பகுதியையும் கைப்பற்றிய இஸ்ரேலியப் படை பலஸ்தீன மக்களின் கடைசி அடைக்கலமாக இருந்த ரபா நகரில் பல பகுதிகளிலும் முன்னேறி வருகிறது. இதனால் அங்கிருந்து ஒரு மில்லியனுக்கும் அதிகமாக பலஸ்தீனர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

எட்டு மாதங்களுக்கு மேல் நீடிக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 37 ஆயிரத்தை தாண்டியுள்ளது. இதேநேரம், இந்தப் போர் காரணமாக காசாவில் உள்ள மக்களுக்கு உணவு, மருந்து மற்றும் ஏனைய விநியோகங்களில் கடுமையான தட்டுப்பாடு நிலவி வருகிறது. இது பெரும் பஞ்சத்துக்கு வழிவகுக்கும் என்று ஐ.நா. நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

குறிப்பாக எதிர்வரும் ஜூலை நடுப்பகுதியில் காசாவில் உள்ள 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தீவிர பட்டினி நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்று ஐ.நா. நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

# பிரான்ஸில் திடீர் தேர்தல்

ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தலில் தனது போட்டியாளரான மரின் லா பென்னின் தேசிய பேரணி கட்சி அமோக வெற்றியீட்டிய நிலையில் பிரான்ஸில் திடீர் பொதுத் தேர்தலுக்கு அந்நாட்டு ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோன் அழைப்பு விடுத்துள்ளார்.

ஐரோப்பிய தோர்தலில் தீவிர வலதுசாரிகள் 32 வீத வாக்குகளை வென்றிருப்பது ஆரம்பக் கட்ட முடிவில் தெரியவருவதோடு, இது ஜனாதிபதியின் மறுமலர்ச்சிக் கட்சி பெற்ற வாக்குகளை விடவும் இரு மடங்கிற்கு அதிகமாகும்.



இதனை அடுத்து பாராளுமன்றத்தை கலைக்கும் அறிவிப்பை வெளியிட்ட ஜனாதிபதி, பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு சில வாரங்களுக்கு முன்னர் ஜூன் 30 மற்றும் ஜூலை 7 ஆம் திகதிகளில் இரு கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸின் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற தேர்தல் முடிந்து ஆரம்பக் கட்ட முடிவுகள் வெளியான நிலையில் எலிசீ மாளிகையில் இருந்து தொலைக்காட்சியில் உரையாற்றிய ஜனாதிபதி மக்ரோன் இந்த எதிர்பாராத அறிவிப்பை வெளியிட்டார். நாட்டை ஆள்வதற்கு யார் தகுதி உடையவர் என்பதை முடிவுசெய்யும் பொறுப்பை மக்களிடமே விடுவதாக அவர் குறிப்பிட்டார்.

தனது இரண்டாவது தவணையின் இரண்டு ஆண்டு பதவிக் காலத்தை கடந்திருக்கும் மக்ரோனுக்கு ஏற்கனவே பிரான்ஸ் பாராளுமன்றத்தில் போதிய பெரும்பான்மை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 27 நாடுகளும் 720 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க கடந்த நான்கு நாட்களாக வாக்களித்தன. பல நாடுகளில் வலசாரிகளின் கரம் வலுத்துள்ளது.

ஜெர்மன் பிரதமர் ஒலாப் ஷோல்ஸும் தோல்வியைத் தழுவினார்.

## ஹொங்கொங் அதிகாரிகளுக்கு அமெரிக்கா விசா கட்டுப்பாடு



ஹொங்கொங்கில் தேசிய பாதுகாப்பு சட்டத்தை அமுல்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்கும் சீன, ஹொங்கொங் அதிகாரிகளுக்கு எதிராக புதிய விசா கட்டுப்பாடுகளை விதிக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது.

அமெரிக்காவின் குடிவரவு மற்றும் குடியுரிமைச் சட்டத்திற்கு அமைய இவ்விசா கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், ஹொங்கொங்கில் ஜனநாயக சார்பு அமைப்பாளர்கள் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பதற்கு ஆழ்ந்த கவலையை தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக சதி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 14 ஜனநாயக செயற்பாட்டாளர்களும் ஓர் அவுஸ்திரேலிய குடிமகனும் குற்றவாளிகள் என ஹொங்கொங் நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதைத் தொடர்ந்தே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுன் மாதம் 11ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.